# பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 3

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

November 2015

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3

# மாபெரும் நவம்பர் புரட்சி நீடூழி வாழ்க!



லெனின்



ஸ்டாலின்

மாபெரும் நவம்பர் புரட்சியின் நூற்றாண்டை நோக்கி நாம் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். பழைய காலண்டர்படி இது அக்டோபர் புரட்சி என்றும் அழைக்கப்படுகின்றது. இப்புரட்சி, மனிதனை மனிதன் சுரண்டுவதிலிருந்து விடுபட்ட புதிய சமுதாயம் பிறப்பதற்கு வித்திட்டது. வரலாற்றுரீதியாக சமுதாயம் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்தை நோக்கி முன்னேறுகின்றதென அறிவியலின் அடிப்படையிலும் அறிவியல் உண்மைகளின் அடிப்படையிலும் அமைந்த உன்னதத் தத்துவமான மார்க்சிசம்–லெனினிசம் உரைக்கின்றது. அது எவ்வளவு சரி என இப்புரட்சி நிரூபித்துக் காட்டியது.

உலக கம்யூனிச இயக்கமானது ஒருவேளை திருத்தல்வாதிகளின் தாக்குதல்களிலிருந்து விடுபட்டிருந்து, மாபெரும் மார்க்சிய தலைவர்களான லெனின், ஸ்டாலின், மா சேதுங், தோழர் சிப்தாஸ் கோஷ் ஆகியோர் காட்டிய சரியான பாதையில் பயணித்திருந்தால் இன்று பூலோகக் காட்சியே வேறாக இருந்திருக்கும். முதலாளித்துவ–ஏகாதிபத்தியம் சவக்குழியைச் சந்தித்து இருக்கும். ஆனால், வேதனையைத் தரும் விதத்தில் உலக கம்யூனிச இயக்கம் தற்காலிக பின்னடைவை சந்தித்திருப்பது உண்மையே. காரணம், உலக ஏகாதிபத்திய முதலாளித்துவத்தால் ஆதரிக்கப்பட்டு திருத்தல்வாத சதித்திட்டத்தால் முதலில் சோவியத் யூனியனிலும் பின்னர் சீனாவிலும் சோசலிசம் அகற்றப்பட்டது. இதனால், யுத்த திட்டங்களைப்போட்டு போர் போர் என கர்ஜித்துக் கொண்டிருந்த முதலாளித்துவ ஏகாதிபத்திய சுறாக்களுக்கு எதிராக அமைதியையும் முன்னேற்றத்தையும் உறுதிசெய்து அரணாக நின்ற சக்திவாய்ந்த சோசலிச முகாம் சிதைந்தது.

இன்றைய ஒருதுருவ உலகில் ஏகாதிபத்திய அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்திய–முதலாளித்துவ சக்திகள் உலகம் முழுதும் அட்டகாசம் செய்து வருகின்றன. ராணுவ பலத்தால் இறையாண்மை கொண்ட சுதந்திர நாடுகளைத் தாக்கி ஆக்கிரமித்தல், பிராந்திய போர்களை உருவாக்குதல், குழந்தைகள் பெண்கள் உட்பட அப்பாவி குடிமக்களைக் கொடூரமாகக் கொல்லுதல், போர்ப் பீதியையும் பதற்றத்தையும் பரப்புதல், இன–வகுப்புவாத மோதல்களை வளர்த்தல், சகோதரச் சண்டைகளை மூட்டுதல், பலவந்தம், சதிகளைச் செய்தல் மூலம் பிறநாடுகளில் ஆட்சிகளை மாற்றுதல் ஆகிய அனைத்தையும் தட்டிக் கேட்பாரின்றி ஏகாதிபத்தியவாதிகள் செய்து வருகின்றனர்.

அதேசமயம், ஏகாதிபத்திய போர் அச்சுறுத்தலுக்கும் முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கும் எதிராக உலகெங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் போராட்டங்களை அதிகரித்து வருவதும் ஆறுதல் தரும் விஷயமாகும். மனிதயினத்தின் கொடிய எதிரியான ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட சக்திவாய்ந்த ஏகாதிபத்திய–எதிர்ப்பு சமாதான இயக்கத்தை சரியான புரட்சிகரத் தலைமையின் கீழ் நடத்தவேண்டியது இத்தருணத்தின் தேவையாகும். இத்தேவையை மனதில் கொண்டு, இந்த இயக்கத்தை வளர்ப்பதற்கு உகந்தவகையில், மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர்களின் மதிப்புமிக்க படிப்பினைகளின்பால் அனைவரின் கவனைத்தையும் ஈர்க்க மறுபடியும் விழைகிறோம்.

இது தொடர்பாக மற்றுமொரு விஷயத்தையும் குறிப்பிடவேண்டும். ஏகாதிபத்தியமும் பாட்டாளிவர்க்கப் புரட்சியும் என அழைக்கப்படும் இக்காலக் கட்டத்தின் இந்தக் கட்டத்தில், மார்க்சிச–லெனினிச தத்துவத்தின் மிக முன்னேறிய வளர்ந்த செழுமையான புரிதல், தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையில் தான் நிலவுகின்றது. இந்திய மண்ணில் மார்க்சிச–லெனினிசத்தை பருண்மைப்படுத்தி லெனினிச மாதிரியில் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவும் போக்கில் தோழர் சிப்தாஸ் கோஷ் மார்க்சிச–லெனினிச அறிவியலை வளர்த்து செழுமைப்படுத்தி அதன் புரிதலை ஓர் உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்தார்.

மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மா சேதுங் ஆகியோரின் உண்மையான மாணாக்கரும் வழித்தோன்றலுமான தோழர் சிப்தாஸ் கோஷ், நவீனத் திருத்தல்வாதத்தின் தோற்றம் குறித்து விளக்கியதோடு உலக கம்யூனிச இயக்கத்தின் சித்தாந்தத் தரம் வீழ்ந்து வருவதைநோக்கி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். சோசலிச அமைப்பிற்கே அபாயமாகும் அளவிற்கு சோசலிச நாடுகளில் புதியவகை தனிமனிதவாதம் தோன்றியிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். அனைத்திற்கும் மேலாக, உண்மையான தனிப்பட்ட நலன்களை சமூக நலன்களுடன் முற்றிலும் ஐக்கியப்படுத்திக் கொள்வதில் தான் ஒரு நல்ல கம்யூனிஸ்டின் உயர்ந்த தரம் இருக்கின்றது என தோழர் சிப்தாஸ் கோஷ் வலியுறுத்தினார். முதலாளித்துவ ஒடுக்குமுறையிலிருந்து வரலாற்றுரீதியாக மனித இனத்தை விடுவிக்கவல்ல மார்க்சிசம்–லெனினிசம் எவ்வளவு சரியானது என்பதை எவ்வாறு சமீபத்திய அறிவியல் வளர்ச்சிகள் உறுதிபடுத்தியிருக்கின்றன என்பதையும் தோழர் சிப்தாஸ் கோஷ் காட்டியுள்ளார்.

## பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் மீது தொடர் கொலைத் தாக்குதல்

# மதச்சார்பற்ற, அறிவியல்பூர்வ சிந்தனைகளுக்கு மத அடிப்படைவாதிகளின் எதிர்வினை

மூடநம்பிக்கை எதிர்ப்பு செயல்வீரரும் பகுத்தறிவுச் சிந்தனையாளருமான மருத்துவர் டாக்டர் நரேந்திர தபோல்கர் இரண்டாண்டுகளுக்கு முன் பூனாவில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு கொலையாளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டபோது நாடே ஸ்தம்பித்தது. மூடநம்பிக்கைகளையும் குருட்டுத் தனத்தையும் எதிர்த்துப் போராட்ட இயக்கத்தை நடத்தியவர் டாக்டர் தபோல்கர். எனவே மதத்தின் பெயரால் மக்களைச் சுரண்டி பணம் பறிக்கும் சாமியார்களையும் மந்திரவாதிகளையும் அவர் எதிர்த்து அவர்களின் தந்திரச் செயல்களை அம்பலப்படுத்திவந்தார்.

முதலாளித்துவ இந்தியாவில் சுரண்டலினால் மக்கள் ஒட்ட உறிஞ்சப்பட்டு வறுமையில் தள்ளப் படுகின்றனர். கஞ்சி குடிப்பதற்கில்லாதோர் அதன் காரணத்தை அறிந்துவிடாமல் இருக்க அவர்களை சிந்திக்கவிடாமல் இருட்டிலேயே வைத்திருக்க ஆளும் முதலாளித்துவ வர்க்கமும் அவர்களின் சேவகர்களான அரசியல்வாதிகளும் விரும்பு கின்றனர். அதற்கு மதத்தையும் அனைத்துவகையான பிற்போக்கு சிந்தனைகளையும் பொய் நம்பிக்கைகளையும் பயன்படுத்தி வருகின்றனர். இத்திட்டத்தின் ஒரு அங்கமாக சாமியார்களையும் தன்னைக் கடவுள் எனக் கூறிக்கொள்ளும் மந்திரவாதிகள் அனைவரையும் ஆளும் வர்க்கம் ஆதரித்து வலம் விட்டிருக்கின்றது. இவர்களின் சூழ்ச்சி என்ற தேன்கூட்டில் டாக்டர் தபோல்கர் தீப்பந்தத்தை வைத்துவிட்டார். மஹாராஷ்டிரா சட்டமன்றத்தில் மூடநம்பிக்கை, பில்லி சூனியம் வைத்தல் போன்றவற்றிற்கு எதிராக சட்ட மசோதாவையும் டாக்டர் தபோல்கர் கொண்டுவந்து நிறைவேற்ற முயற்சித்தார் ஆனால் தோல்வியுற்றார். இயற்கையாகவே, பிற்போக்கு சக்திகளின் கண்களில் இவர் எரிச்சல் ஊட்டியதில் வியப்பில்லை. இந்துமதவெறி அமைப்புகளான சனாதன் பிரபாத், ஹிந்து ஜனஜக்ருதி சமிதி போன்றவை இவரை அடிக்கடி மிரட்டிக்கொண்டிருந்தன. இறுதியில், இவர்களின் ஆத்திரத்திற்கு தன் உயிரை இவர் விலையாகக் கொடுக்க வேண்டியதாயிற்று.

மூடநம்பிக்கைகளுக்கு எதிராகக் குரலெழுப்பி வந்த டாக்டர் கோவிந் பன்சாரேயும் இந்த வெறியர்களின் குண்டுக்கு சமீபத்தில் பலியானார். சிவாஜியின் மஹாராஷ்டிராவில் இஸ்லாமியர்களின் பங்களிப்பை பறைசாற்றும் விதத்தில் 'யார் சிவாஜி?' என்ற, விற்பனையில் சாதனைபடைத்த புத்தகத்தை வெளியிட்டதன்மூலம் இந்து அடிப்படைவாத பிராந்தியவாத வெறியர்களை அவர் சீண்டினார். காந்திஜியைக் கொன்ற நதுராம் கோட்சேவை நாயகனாகப் போற்றும் இந்து அடிப்படைவாத ஆர்எஸ்எஸ்–சங் பரிவாரத்தின் செயல்பாடுகளை

தொடர்ச்சி 6ம் பக்கம்

# குஜராத் மாநில படேல் சமூகத்தவரின் இடஒதுக்கீட்டுப் பிரச்சினை எதனை வெளிக்காட்டுகின்றது

வேலை, பதவி உயர்வு மற்றும் கல்வியில் இட ஒதுக்கீடு வேண்டுமென்ற பிரச்சினை நமது நாட்டில் மீண்டும் தலையெடுத்திருக்கிறது. தொடர்ந்து வழக்கமான வெறிவாதம், மோதல்கள், உயிர் மற்றும் உடைமை பறிபோதல்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. இடஒதுக்கீட்டை மையமாக வைத்து இருபிரிவினரிடையே அல்லது குழுக்களிடையே புதிய புதிய தாக்குதல்களும் எதிர்த் தாக்குதல்களும் வழக்கமாக நடைபெற்று வருகின்ற வேளையில், இப்பிரச்சினை, தற்போது புதிய மேலும் அதிகரிக்கும் அபாயகரமான பரிமாணத்தை அடைந்திருக்கிறது.

இம்முறை இது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இடம் குஜராத், இது, ஏகபோக கார்ப்பொரேட் எஜமானர்களால் வழிநடத்தப்படும் பிரதமர் மோடியின், அந்த எஜமானர்களின் ஆதரவு பெற்ற ஊடகங்களால் 'குஜராத் மாடல்' என வளர்ச்சி மாநிலமாகக் காட்டப்படும் மாநிலமாகும்.

பொருளாதாரத்தில் மற்றும் சமூதாயத்தில் உயர் வான இடத்திலிருக்கும் படேல் (பட்டிதார்) சமூகத்தைச்சார்ந்த பல லட்சம் பேர் திடீரென திரண்டுவந்து அரசாங்க கல்வி நிறுவனங்களிலும் வேலையிலும் பிற பிற்படுத்தப்பட்ட (ஓபிசி) வகுப் பினருக்கான இடஒதுக்கீட்டு பங்கீடு (கோட்டா) போன்று தங்களுக்கும் ஒதுக்கீடு வேண்டும்; அல்லது சாதிவாரியான இடஒதுக்கீடு முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆகஸ்டு மாதம், 25ஆம் தேதியன்று அகமதாபாத்தில் ஒன்று கூடினர்.

கடந்த ஜூலை மாதத்தில்தான் "பட்டிதார் அனாமத் அண்டோலன் சமிதி" (PAAS பிஏஏஸ்)ன் ஒருங்கமைப்பாளரான ஹார்த்திக் படேல் என்பவர் பிரதானமாக இந்த போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். சர்தார் படேல் குழு (எஸ்பிஜி) பட்டிதார் இளைஞர் அமைப்பு போன்ற பிற அமைப்புகளும் அங்கே இருக்கின்றன. ஹார்த்திக் படேல் ஒருமுறை இந்த எஸ்பிஜிஅமைப்பின் விரம்கம் கிளையின் தலைவராக இருந்து இப்போது விலகியவராவார்.

முதல்வர் ஆனந்திபென் படேல் தலைமையில் பாஜக மாநில அரசாங்கம் இக்கிளர்ச்சியை அடக்கு வதற்காக போலீசை பயன்படுத்தி ஹார்த்திக் படேல் உள்ளிட்ட அதன் தலைவர்களை, ஓர் குறுகிய காலமா யிருந்தாலும் கூட கைது செய்து சிறையிலடைத்தது. ஆனால் அப்போராட்டம் தொடர்ந்து நடைபெற்று மாநிலம் முழுவதும் பரவியது. கிளர்ச்சியாளர்கள் சாலை மறியல், பேருந்துகள் மற்றும் பிற வாகனங் களுக்கு தீவைத்தல் போன்ற நாசகர வேலைகளில் ஈடுபட்டனர். நகரிய மையங்கள், வார்டு அலுவலகங் கள், அரசாங்க சவுக்கிகள், ஏன் படேல் சமூகத்தை சார்ந்த மந்திரிகளின் இல்லங்களுக்குக்கூட தீவைத் தனர். இப்போராட்டத்தினை அடக்குவதற்காக மாநில அரசாங்கம் அனைத்துவித நடவடிக்கை களையும் மேற்கொண்டது மட்டுமின்றி, வலைதள சேவை, கைபேசியின் வாட்ஸ் அப் மற்றும் குறுந் தகவல் சேவை (எஸ்எம்எஸ்) போன்ற சமூக ஊடக தளங்களை முடக்கிடவும் கோரியது.

இறுதியாக 3500 துணைராணுவ படையினரும் 93 மாநில ரிசர்வ் கம்பெனிகளும் கலவரம் பாதித்த பகுதிகளில் குவிக்கப்பட்டனர். ஒரு மாத காலத் திற்குப் பின்னரும் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் அடங்காமல் போகவே நரேந்திர மோடி தனது மௌனத்தினை கலைத்து பட்டிதார்/படேல் சமூகத் தவரை பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அங்கீ காரம் அளிப்பதாகவும் அதனால் அமைதியாக இருக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

இக்கிளர்ச்சியானது, நமக்கு புலப்படுத்தியது போல், வெறுமனே இடஒதுக்கீடு பற்றியது மட்டு மல்ல, குஜராத்தின் மிக உயர்ந்த சமூகத்தவர்கள் மத்தியில் காணப்பட்ட ஓர் ஆழமான அதிருப்தியின் பிரதிபலிப்பாகும். இருப்பினும் இதுகுறித்து மேலும் விபரங்கள் தெரிந்து கொள்வதற்கு முன்னர், இட ஒதுக்கீடு பிரச்சினையின் சுருக்கமான சரித்திரப் பின்னணியை அறிந்து கொண்டோமேயானால் விஷயம் தெளிவாகப் புரியவரும்.

### இடஒதுக்கீட்டுக் கூக்குரல் பல ஆண்டுகளாகவே ஒலித்துக் கொண்டிருக்கின்றது !

நீண்டகாலமாக அடக்கப்பட்டு சமுதாயத்தில் ஒதுக்கியும் வைக்கப்பட்டிருந்த தலித் சமூகத்த வரின் தேக்கி வைக்கப்பட்டிருந்த நியாயமான மனக்குறைகளை கவனிப்பதற்காக இந்த இட ஒதுக்கீட்டு பிரச்சினைக்கு விடுதலையடைந்த இந்தியாவில் ஓர் அரசியலமைப்பு சட்டரீதியிலான அந்தஸ்து வழங்கப்பட்டது. அதன்படி நாட்டின் பிரதான நீரோட்டத்தில் அவர்களை கொண்டுவர வகைசெய்யும் பொருட்டு அட்டவணைப் படுத்தப் பட்ட சமூகத்தவருக்கும் பழங்குடியினத்தவருக்கும் (எஸ்சி மற்றும் எஸ்டி) அரசாங்க அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்களில் பதவிகள் மற்றும் பள்ளி கல்லூரிகளில் ஓர் குறிப்பிட்ட சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கிட அரசியலமைப்பு சட்டத்தில் தனி ஷரத்து உருவாக்கப்பட்டது. அந்த ஷரத்தில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் அது மறு சீராய்வு செய்யப்பட வேண்டுமென கூறப்பட்டிருக்கிறது.

ஆயினும் இப்போது அதுபோன்ற 6 பத்தாண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டபடி பிற பிற்படுத்தப்பட்ட வகுப் பினரை (ஓபிசி) மண்டல் கமிஷன் பரிந்துரையின் படி மத்தியிலிருந்த விபி சிங் அரசாங்கம் 1990ம் வருடம் ஆகஸ்டு மாதம் இடஒதுக்கீடு வரம்பிற்குள் கொண்டு வந்து அவர்களுக்கு மத்திய அரசாங்க மற்றும் பிற பொதுத்துறை நிறுவனங்களில் 27 சதவீதம் வேலை ஒதுக்கீடு வழங்கியது.

அதனைத் தொடர்ந்து, 2005–2006ல் இடஒதுக் கீட்டு பிரச்சினை மீண்டும் தலை தூக்கியது. அப்போதிருந்த காங்கிரஸ் அரசாங்கம் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (ஓபிசி) இட ஒதுக்கீட்டு பங்கினை ஐஐடி, ஐஐஎம் மற்றும் மத்திய பல்கலைகழகங்களுக்கும் விரிவு படுத்தியது. அதன் ஓராண்டிற்குப்பின் 2007ம் வருடம் ஜூன் மாதம் ராஜஸ்தான், டில்லி, ஹரியானா, மத்திய பிரதேசம் மற்றும் உத்திரப்பிரதேச மாநிலங்கள் இடஒதுக் கீட்டு பிரச்சினையினால் தீப்பிடித்து எரிந்தன. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருடன் (ஓபிசி) சேர்க்கப் பட்டிருந்த குஜ்ஜார் சமூகத்தினர் தங்களை பழங்குடி சமூகத்தவருடன் (எஸ்டி) சேர்த்திடவேண்டுமென்ற கோரிக்கை வைத்தபோது, அங்கு ஓர் மூர்க்கத் தனமான கிளர்ச்சி வெடித்துக் கிளம்பியது. தற்போது குஜராத்தின் படேல் சமூகத்தவரால், பின்னர் குஜராத் பிராமண சமூகத்தவரால் மீண்டும் இப்பிரச்சினை கிளப்பிவிடப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற பிரச்சினைகள் கிளர்ந்து பரவுவது ஒன்றும் புதியதல்ல. அவ்வப்போது ஏதாவது ஓர் பிரச்சினையை முன்வைத்து நாட்டில் எங்காவது இவை வெடிக்கின்றன. இவ்வாறான கிளர்ச்சிகளின் சுருக்கமான வரலாற்றினை பார்த்தால், எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தவர்களின் வாழ்நிலைமையினை உயர்த்துவதற்காக இவை ஒருபோதும் நடைபெற வில்லை என்பதைப் பார்த்திடலாம். மாறாக அவர்கள் சாதிய–சமூக உணர்களை தூண்டிவிட்டு ஒருபகுதி பொதுமக்களை மற்றவருக்கு எதிராக நிறுத்து கின்றனர்.

அரசாங்கத்திற்கும் கிளர்ச்சியில் முன்னிறுத்தப் பட்ட தலைவர்களுக்குமிடையே ஓர் ரகசிய புரிதல் ஏற்பட்ட பின்னர், இவ்வாறான கிளர்ச்சிகள் தணிந்து போய்விடுகின்றன. ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு பலிகடாவாக்கப்பட்ட பொதுமக்கள் வெவ்வேறு திசையில் பிரிந்து சென்று, ஏதாவது ஒரு அரசியல் சக்திக்கு உறுதியான ஓட்டு வங்கிகளாக மாறுகின்றனர்.

### இரக்கமின்றி சுரண்டப்பட்ட மற்றும் ஏமாற்றப்பட்ட மக்கள் கிளர்ந்தெழ முயற்சிக்கையில்தான் இடஒதுக்கீட்டு கூக்குரல்கள் எழுப்பப்படுகின்றன !

இடஒதுக்கீட்டையொட்டி தற்கொலை, சகோதரக்கொலைகள் எவ்வாறான சூழ்நிலைமை களில் நிகழ்கின்றன? இதுபோன்ற நிகழ்வுகள் அனைத்திலும் ஒரு பொதுவான அம்சம் இருப்பதை பார்க்கலாம். நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இந்நாட்டிலிருக்கும் முதலாளித்துவ அமைப்பு சுதந்திரமடைந்த காலந்தொட்டே நீண்ட காலமாக ஒருசில இயந்திரமய ஆலைகளைத்தவிர குறிப்பிடும்படியான தொழில்மயமாக்கல் ஏதும் செய்யவில்லை. இதனால் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மந்த நிலையைத் தொடர்ந்து பெருகிவரும் வேலையின்மை, கடும்சந்தை நெருக்கடி, செல்வம் மற்றும் உரிமைகளில் ஏற்பட்டிருக்கின்ற பாகுபாடு, வறுமை மற்றும் இதுபோன்ற துயரங்கள் மக்கள் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றன.

இயற்கையாகவே இதன் காரணமாய், மக்களின் அதிருப்தியும் கோபமும் ஒன்று சேர்ந்து அடக்கி வைக்கப்பட்டு அவ்வப்போது வெடித்தெழவும் கூட செய்கின்றன. ஆளும் ஏகபோகங்களும் அவர்களது அரசியல் நிர்வாகிகளான பல்வேறு முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ, தேசிய அல்லது பிராந்திய மற்றும் ஏன், சிபிஐ, சிபிஐ(எம்) போன்ற சமூக ஜனநாயக கட்சிகள் உட்பட அனைத்து அரசாங்கங்களின் ஓரே நோக்கமானது, மக்களின் வெறுப்புணர்வு, இவ்வமைப்புக்கு எதிரான ஒன்றுபட்ட அமைப்புரீதியிலான மக்கள் இயக்க வடிவத்தினை எடுத்திடாமல் பார்த்துக் கொள்வதுதானாகும். ஒருபுறம் அவர்கள் வளர்ச்சி எனும் கோஷத்தினை முன்வைத்து மக்களை மயக்கி, அவர்களை ஏமாற்றிட முயற்சிக்கின்றனர். மற்றொருபுறம், அவர்களின் சொந்த பிரச்சினை களிலிருந்து மக்களை திசை திருப்பி அவர்கள் தங்களுக்குள் எப்போதும் மோதிக் கொண்டே யிருக்கும் வகையில் அவர்களிடையே பிளவை ஏற்படுத்திட, தீவிரமாக முயற்சிக்கின்றனர்.

சரித்திரபூர்வ காரணங்களுக்காக, மக்களை மேற்கூறியபடி பிரித்தாள மிகவும் சுலபமான சாதனமாக சாதி, மதம் என்பது அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஆக, இவர்கள் ஜாதி–மத அடிப்படையிலான இடஒதுக்கீட்டுப் பிரச்சி னையை அவ்வப்போது தோண்டியெடுத்து, அனைத்து ஊடக மற்றும் பண ரீதியிலான பின் பலத்துடன் மக்களை அதில் கட்டிப்போட்டும், திடீரென முளைத்து தானாக விளம்பரப்படுத்திக் கொண்ட தலைவர்களை உருவாக்கியும் மக்கள் முன் முன்னிறுத்தியும் மக்களிடம் வெறுப்புணர்வு, நம்பிக்கையின்மை மற்றும் பகையுணர்வையும்கூட ஏற்படுத்தி, நல்லிணக்க சூழலை சீர்குலைக்கின்றனர்.

இவ்வாறாக, 1990ஆம் வருடம் அரசாங்கமும் தொழிலதிபர்களும் ஏற்கனவே நழுவிச் சென்றுகொண்டிருக்கும் வேலை வாய்ப்பினை இன்னும் குறைத்திடக்கூடிய கணினிமயமாக்களில் மும்முரமாக ஈடுபட்டிருக்கையில், மத்திய அரசாங்க மானது வேலைக்கு ஆள் எடுப்பதற்கு தடை விதித்திருந்த நேரத்தில் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அது உயர் ஜாதி மாணவர்கள் தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு பயங்கர குருதி வெள்ளத்தை ஏற்படுத்தியது.

மீண்டும் 2006ம் வருடம் காங்கிரஸ் தலைமை யிலான மன்மோகன் சிங்கின் யுபிஏ அரசாங்கம், அடுக்கடுக்காக தனியார்மயம், உலகமயம், பொருளா தார தாராளமயம், அதீத வணிகமயம், கடும் கல்விக் கட்டண உயர்வு போன்றவற்றினை அறிமுகப்படுத் தியது. கடுமையான சூழ்நிலையில், மத்திய அரசாங்கம் ஐஐடி மற்றும் இதர நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்டோருக்கு (ஓபிசி) இட ஒதுக்கீடு எனும் ஆசை வார்த்தைகளை அள்ளி வீசியதால், உயர்ஜாதி தாழ்ந்த சாதி என்றழைக்கப் படுகின்ற மணவர்களுக்கிடையில் சகோதரத்துவ மோதல்களை ஏற்படுத்தியது. இந்த மோதல்களி லிருந்து 1990ல் விபி சிங் அரசாங்கமும், 2006ல் காங்கிரஸ் அரசாங்கமும் தலித், எஸ்சி–எஸ்டி, ஓபிசி சமூகத்தவரின் ஆதரவை பெற்றிட முயன்றபோது, பாஜக கட்சி உயர் ஜாதி இந்துக்களின் ஓட்டு வங்கியை ஸ்திரப்படுத்திட முயற்சி செய்தது.

2007ல் குஜ்ஜார் பிரச்சினையும்கூட பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தி, ராஜஸ்தானின் செல்வாக்கு மிகுந்த பழங்குடியினத்தவரான மீனாஸ் உடன் குஜ்ஜார் சமூகத்தவரின் முழு வீச்சிலான மோதல்கள் ஏற்பட்டு இரு சமூகத்தை சார்ந்தவர்களின் உயிர்களை காவுகொண்டது. முடிவில் ஓட்டு வங்கிக்காகவே இரு சமூகத்தினரும் பயன்படுத்தப்பட்டிருப்பதை காண முடிந்தது. தேர்தலுக்கு முன்பு குஜ்ஜார் சமூகத்தவருக்கு பாஜக அளித்த வாக்குறுதி காற்றில் வீசப்பட்டு அவர்கள் அந்தரத்தில் விடப்பட்டனர். மீனாஸ் சாதியினரும் தமது முந்தைய மேலாதிக்க நிலையை இழந்தனர். ஆனால் இரு சமூகத்தைச்சார்ந்த விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு பகுதியினர் சலுகைகளை பெற்றுக்கொண்டு பலனடைந்த அதேசமயம், இரு சமூகத்தைச்சார்ந்த மிகவும் ஏழையான மக்கட்

தொடர்ச்சி 3ம் பக்கம்

# இடஒதுக்கீடு கோரிக்கை மக்களுக்கு பலன் அளித்திருக்கிறதா? மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்தியிருக்கிறதா?

2ம் பக்கத் தொடர்ச்சி

பிரிவினர் அக்கிளர்ச்சிக்கு முன்பும் அதற்குப் பின்பும் தொடர்ந்து ஒடுக்கப்பட்டுக் கொண்டே தான் இருந்தனர்.

### படேல் இடஒதுக்கீடு கிளர்ச்சியின் தலைமை தங்கள் சமூகத்தவர்களிடம் காணப்படும் வெறுப்புணர்ச்சியை பயன் படுத்தி ஆதாயம் அடைய முயல்கின்றது

இதற்கு முன்பு நடந்த கிளர்ச்சிகளின் வரிசையில் இப்போது குஜராத் மாநிலத்தின் படேல் சமூகத்தவர்களின் கிளர்ச்சியும் சேர்ந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே நடைபெற்ற இட ஒதுக்கீட்டு கிளர்ச்சிகளின் பின்னணியில் கண்ணுற்றதைப் போலவே இப்போதும் மந்தமான பொருளாதார சூழ்நிலையால் மக்களிடம் அதிருப்தி அதிகரித்துவந்தது. இப்பின்னணியில் பணம் பொருள் ஊடகம் ஆகியவற்றின் உதவியுடன் சில சுயநலக்காரர்கள் கலகத்தினை ஏற்படுத்திடுவதற்கான சூழ்நிலைமையை உருவாக்கினர். இதனால் வன்முறை, உயிருக்கும் உடைமைக்கும் பெருஞ்சேதம் விளைவிப்பது மற்றும் பட்டிதார்/ படேல்–தாக்கோர் சமூகத்தவரிடையேயான கொலை வெறித் தாக்குதல்கள் போன்ற அனைத்தும் அரங்கேறின.

‘குஜராத் மாதிரியான வளர்ச்சி’ யென என்ன தான் பெருமையடித்துக் கொண்டாலும், பாஜக ஆளுகின்ற குஜராத் மாநிலம் கார்ப்பொரேட், ஏகபோக முதலீட்டுக்குச் சாதகமான மாநிலமாக மாறிவிட்டது. ஆனால் அதற்கிணையாக சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் கடுமையாக நலிவுற்று, பன்னாட்டு மற்றும் உள்நாட்டின் தொழில்துறைகளில் வேலை வாய்ப்பு மிகவும் குறைந்துவிட்டது. மாநிலத்திலும் மத்தியிலும் ஆளுகின்ற அரசாங்கங்களின் கார்ப்பொரேட்டுகள், நில ஆதிக்க சுறாக்கள் மற்றும் ரியல் எஸ்டேட் ஆதிக்க சக்திகளுக்குச் சாதகமான சமீபத்திய நிலக்கொள்கையினால் மக்கள் தங்கள் நிலங்களை இழந்து வருகின்றனர்.

முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக, வைர வியாபாரத்தில் கொடிகட்டிப் பறப்பவர்கள், சோப்பு தயாரிப்பில் முன்னணியில் இருப்பவர்கள், ரியல் எஸ்டேட் பெரும் வணிகர்கள், வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து வெற்றிகரமாக வணிகம் செய்பவர்கள்–அமெரிக்காவின் சாலையோர உணவு விடுதிகளுக்கு உரிமையாளர்கள் என அழைக்கப்படும், காலங்காலமாக உருவாகிப் பிரபலமாயிருக்கும் படேல் சமூகத்தவர் பொருளாதார ரீதியில் பலம் கொண்டு ஒருபுறம் இருக்கையில், எதிர்முனையில் சூரத், அம்ரேலி –பாவ்நகர் பகுதிகளிலுள்ள நூற்றுக்கணக்கான சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டு நடுத்தர வர்க்க படேல் சமூகத்தவருக்குச் சொந்தமான நிலங்கள் அளவு வடிவத்தில் சுருங்கிக்கொண்டிருக்கின்றன. பணப் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைக்கப் பெறாததால் பஞ்சு உற்பத்தியில் முதலிடத்திலிருக்கும் அம்மாநிலத்தில் நெருக்கடி உருவாகியிருக்கிறது. ஆக, நடுத்தர படேல் சமூகத்தவரும் பிறரும் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர்.

கடந்த இருபது ஆண்டுகளில் குஜராத் மாநிலத்தில் ஒரு பெருந்தொகையாக 1.80 லட்சம் கோடி ரூபாய்கள் முதலீடு செய்யப்பட்டு வருடாந்திர தொழில் வளர்ச்சி 22 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டது. ஆனால், வேலை வாய்ப்பு அதிகரிப்பு வெறுமனே 3.5 சதவீதமாக இருக்குமென உத்தேசிக்கப்பட்டது. விவசாயத்தில் முதன்முறையாக குஜராத் மாநிலம் 2012–13ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) பின்னோக்கிய வளர்ச்சியை (– 6.96%) (ஏப்ரல் 2015 சிஏஜி அறிக்கை) கண்டது.

இவ்வாறாக, அச்சமூகத்தின் மற்றொரு முனையில், அதிகரிக்கும் எண்ணிக்கையில் வறியவர்களாகிக் கொண்டிருக்கும் சிறு விவசாயிகள், வைர தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள், வேலையில்லாதோர், எதிர்காலமற்ற இளைஞர்கள் உள்ளனர். தற்போது எதிர்ப்பினை துவக்கியிருக்கும் எஸ்பிஜியின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டதுபோல், “பொருளாதார ரீதியில் பின் தங்கிய லட்சக்கணக்கான படேல் சமூகத்தவர் உள்ளனர்”.

முதலாளித்துவமானது இறுதியில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே இருக்கின்ற நடுத்தர வர்க்கத்தினரை ஒழித்துவிடும் எனும் மார்க்ஸ் அவர்களின் மதிப்பு வாய்ந்த இறுதி ஆய்வினை இவ்விவரங்கள் உறுதிசெய்கின்றன. இயற்கையாகவே ஒரு காலத்தில் மேன்மையான நிலையிலிருந்த பட்டிதார்கள், படேல் சமூக இளைஞர் மத்தியில் இன்று காணப்படும் ஓர் பாதுகாப்பற்ற உணர்வு அவர்களிடையே அதிருப்தியை அதிகரிக்காமல் இல்லாமலிருக்க முடியாது. இவ்வாறான அம்சங்கள் நாடு முழுவதிலும் இவர்களைப்போல் இருக்கின்ற அனைவரிடமும் காணப்படும்.

இவ்வாறான அதிருப்தி ஒரு சக்திவாய்ந்த ஒன்றுபட்ட அமைப்பு ரீதியிலான மக்கள் இயக்கமாக மாறாத வண்ணம் பார்த்துக்கொள்ள, ஆட்சியாளர்களும் அவர்களின் பாதுகாவலர்களும் மக்களை அப்படியே வைத்திருக்க, அனைத்து வகையான ஏமாற்று வேலைகளையும் தந்திரங்களையும் கையாளுகின்றனர். ஆக, அரசாங்கத்தை தாங்கள் எதிர்த்ததைப் பெருமையாகக் கருதும் பட்டிதார்/ படேல் போராட்டம் எதையும் சாதித்து விட்டதாகத் தெரியவில்லை. ஆனால் திரைமறைவில் அனைத்துவிதமான ஆதரவினையும் அளித்து, திடீரென ஒரு தலைவரை உருவாக்கி, பெரும் பணம் பொருள் செலவு செய்து ஓர் மாபெரும் ஊர்வலத்தை நடத்தி, ஊடகத்தின் உதவியுடன் நன்கு கட்டியமைக்கப்பட்ட ஒரு அமைப்பினை உருவாக்கிய சில சக்திவாய்ந்த நபர்கள் தான் இதன் பலனை அனுபவித்தனர்.

அஃதாதெனில், அச்சமூகத்தினரிடையே அதிகரித்துவந்த பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் அதிருப்தியானது ஆளும் வர்க்கத்தினருக்கு எதிராக அல்லமல் இக்கிளர்ச்சியின்மூலம் பிற இன மற்றும் சமூகத்தினருக்கெதிராக திசைதிருப்பப்பட்டதுதானாகும். இப்பிரச்சினை படேல் சமூகத்தினரோடு ஒருபோதும் நின்றுவிடவில்லை. மிக உயர்ந்த நிலையிலிருக்கும் பிராமண சமூகத்தவரும்கூட தங்களுக்கு இடஒதுக்கீடு வேண்டுமென்று கோர ஆரம்பித்துவிட்டனர் என்ற செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

### மக்களை ஏமாற்றிடவே வேலைக்கான இடஒதுக்கீடு கோருகின்றனர். ஆனால் பெருகிவரும் வேலையின்மைக்கான காரணம் குறித்து எப்போதும் பேசுவதில்லை

இத்தருணத்தில் இடஒதுக்கீட்டினையொட்டி நடைபெற்ற கிளர்ச்சிகள், முதலாளித்துவ அரசியல்வாதிகளின் இடஒதுக்கீடு முழக்கங்கள் அல்லது அதற்கெதிரான வாதங்கள் என எதுவாகவிருந்தாலும், இவை எதுவுமே அதிகரித்துவரும் வேலையின்மை, ஒட்டு மொத்த வேலையிழப்பு மற்றும் ஆலை மூடல் பற்றி ஒருபோதும் பேசுவதில்லை. இவை ஏன் ஏற்படுகின்றன இதற்கு யார் பொறுப்பு என்பவை குறித்து அவர்கள் ஒருபோதும் பேசுவதில்லை. இறுதியாக இத்தகைய கொடுமையான தீமைகளை தொடர்ந்து உருவாக்கிக்கொண்டிருக்கும் நம் நாட்டின் முதலாளித்துவ அமைப்பினை தூக்கியெறியும் நோக்கத்துடன், இடஒதுக்கீடு பிரச்சினையின் பிரதான கேள்விகளுக்கான விடையினை மக்கள் அறிந்திடவேண்டும் என்பது பற்றி இவர்கள் பெரும்பாலும் கவலைப்படுவதில்லை. இதுபற்றி பேசுவதற்கு அவர்களுக்கு தைரியமுமில்லை. மாறாக வாக்குவங்கி அரசியலில் தங்களின் அற்ப ஆதாயத்திற்காக முதலாளித்துவ அரசியல்வாதிகள், மக்களை ஒருவரையொருவர் கழுத்தை பிடித்துக்கொள்ளும் நிலைமைக்குத் தள்ளுகின்றனர். அடிப்படையான பிரச்சினைகளிலிருந்து இந்த அரசியல்வாதிகள் வெகு தூரம் விலகி நின்று, இடஒதுக்கீடு வேண்டும் அல்லது தேவையில்லை என்றுமட்டுமே பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இரண்டாவதாக, இடஒதுக்கீட்டை அனுபவித்து வருபவர்களுக்கு மீண்டும் மீண்டும் நடைபெறும் இது போன்ற தீவிரமான போராட்டங்கள் உண்மையான, நீண்ட கால பயன்களை தந்திட முடிந்திருக்கின்றதா? காலங்காலமாக ஒடுக்கப்பட்ட தலித் சமூகத்தவர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட மக்களை நாட்டின் பிரதான நீரோட்ட மட்டத்திற்கு கொண்டுவரவே இடஒதுக்கீடு என்பது அறிமுகப் படுத்தப்பட்டது. உறுதியளிக்கப்பட்ட இடஒதுக்கீட்டின் பயன்கள் பெருகியதா? பெரும் எண்ணிக்கையிலிருக்கும் தலித் மக்களுக்கு, எஸ்சி–எஸ்டி சமூகத்தவர், ஓபிசி சமூகத்தவர்களில் பெரும்பாலோனோருக்கு சிறிதாவது அப்பயன்கள் சென்றடைந்ததா? ‘இல்லை’ என்பதுதான் அழுத்தமான ஒரே குரலாயிருக்கின்றது!

விடுதலையடைந்து 68 ஆண்டு கால அனுபவம் என்ன? தலித், எஸ்சி–எஸ்டி உள்ளிட்ட பரந்து பட்ட மக்கட்பிரிவினர் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் கிடைக்கப்பெறாமல், அன்று எப்படியிருந்தார்களோ அதே நிலைமையில் தான் இன்றுமிருக்கின்றனர். சாதி, சமூகம், மதம் மற்றும் பிற எதுவாயிருப்பினும், சுதந்திர இந்தியாவிலுள்ள அனைத்துப்பிரிவினர் மத்தியிலும் காண்பது போன்றே எஸ்சி–எஸ்டி சமூகத்தினரிடத்திலும், வசதிபடைத்தோர் – வசதியற்றோர் என உருவாகி அவர்களுக்கிடையேயான இடைவெளி எப்போதும் அதிகரித்து அவர்களின் நிலைமை இன்னும் மோசமாகியிருக்கிறது.

கல்வி பெருவதற்கான வாய்ப்பு ஏற்கனவே சுருங்கிக்கொண்டு, வறுமையானது பொதுமக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் கல்வியறிவு, பள்ளிப்படிப்பு நிறுத்தல் சதவீதம், கல்வி நிறுவனங்களும் இன்னும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் அல்லது அரசாங்க அலுவலகங்களிலும்கூட அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை அல்லது பதவியிடத்தை நிரப்புதல் போன்ற ஒவ்வொரு கேள்வியிலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கிற்கு கீழாக தலித் இன, எஸ்சி–எஸ்டி பிரிவினர் மேலும் பின்தங்கியேதானிருக்கின்றனர்.

இந்த இடஒதுக்கீட்டின் விளைவாக எது நடந்திருக்கின்றதெனில், 2 லிருந்து 3 சதவீதமான சொற்ப அளவிலான தலித் சமூகத்தவர் மற்றும் பிறர், அனைத்து வாய்ப்புகளையும் பயன்களையும் அபகரித்துக் கொண்டுள்ளனர். இவ்வாறான ஒரு சிறு பகுதியினர் ‘கிரீமி லேயர்’ ஆகவும் ஒரு மிகச்சிறு குழுவினர் பணம் படைத்த ‘மேல்தட்டு’ மக்களாகவும் மாறி, எல்லா உரிமைகளையும், அதிகாரத்தையும், சமுதாயத்தில் உயர்மட்டத்திலிருக்கும் / ஆதிக்கம் செலுத்திவரும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைப்போன்றே இவர்களும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர்.

இறுதியாக அவர்கள், தங்கள் ஜாதியை அல்லது சமூகத்தைச் சார்ந்த அவர்களது சகோதரர்களின் வேகமாக சீரழிந்துவரும் வாழ்க்கைத்தரத்தினை கண்டும் காணாமல் –அலட்சியத்துடன் நடந்து கொள்கின்றனர். யதார்த்தத்தில் இவர்களில் பெரும்பகுதியினர் அத்தகைய சலுகைகளை வழங்கிய ஆளும் பூர்ஷ்வாக்களுக்கு சேவகம் புரியும் கையாட்களாக மாறிவிடுகின்றனர். உதாரணமாக பழங்குடியின ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதல் மந்திரி தனக்கு சாதகமான நிறுவனங்களுக்கு சட்ட விரோதமாக சுரங்க ஒதுக்கீடு உரிமைகள் வழங்கியதன் மூலம் சுமார் 6000 கோடி ரூபாய்கள் சுருட்டிட முடிந்திருப்பதை கூறலாம்.

### சுய ஆதாயம் தேடும் முதலாளித்துவ அரசியல்வாதிகளின் கைகளில் இடஒதுக்கீடு ஓர் சாதனமாகும்

மக்களிடம் அதிகரித்துவரும் அதிருப்தியையும் கோபத்தினையும் வைத்து விளையாடி, அவர்களின் வறுமையினையும் துயரத்தினையும் பயன்படுத்தி, சுயநலம் தேடும், சந்தர்ப்பவாத நோக்கத்துடன் தங்களை வளர்த்துக்கொள்ள விரும்பும் முதலாளித்துவ கட்சிகளின்–தலைவர்களின் கைகளில் இடஒதுக்கீடு இவ்வாறாக ஒரு சாதனமாக மாறியிருக்கின்றது.

மக்களுக்கு இடஒதுக்கீடு என்பது, வேலை வாய்ப்பினை உருவாக்காது. பின், அவர்களது உண்மையான பிரச்சினைகளிலிருந்து அவர்களின் கவனத்தை திசைதிருப்பிடும் ஒரு தந்திரமாகவும் மோசடியாகவுமிருப்பதன்றி, வேறெந்த நோக்கத்தினை அது நிறைவேற்றும்?

ஒப்பீட்டளவில் சமுதாயத்தில் நல்ல நிலைமையிலிருக்கும் பிரிவினரும் சமூகத்தினரும்கூட இடஒதுக்கீட்டிற்காக கூக்குரலிடும் நிலைமையும்கூட உருவாகியிருக்கிறது. குஜராத் மாநிலத்தில் சமீபத்தில் பிராமண சமூகத்தினர் இடஒதுக்கீட்டிற்காக குரலெழுப்பியிருப்பது ஓர் உதாரணமாகும். இந்த மோசமான விளையாட்டில், ஆளும் முதலாளித்துவ வர்க்கம், ஏகபோகவாதிகள், அவர்களுக்கு அடிபணிந்து நிற்கும் முதலாளித்துவ அரசியல் கட்சிகள் தங்களது கேடுகெட்ட ஆட்சியினை நடத்தும் பொருட்டும் தங்களது ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டும் வாக்குகள் அடிப்படை

தொடர்ச்சி 4ம் பக்கம்

# இடஓதுக்கீட்டுக்குப் பின்பும் ஓடுக்கப்பட்ட மக்களின் துயரம் தொடர்கிறது

*3ம் பக்கத் தொடர்ச்சி*

*யிலான அரசியலை எளிதாக நடத்துவதற்காகவும் தங்களுக்குள் போரிட்டுக்கொள்ளும் குழுக்களாக உருவாக்கி, மக்களை பிரித்தாள ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு நாளும் திட்டங்களைத் தீட்டி வருகின்றனர். தொடர்ச்சியான ஒன்றுபட்ட அமைப்புரீதியான உழைக்கும் மக்களின் இயக்கங்கள் உதவியுடன் இத்திட்டமானது முறியடிக்கப்பட வேண்டும்.*

*அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் குஜராத்தில் ஆதிக்கம் செலுத்துபவர்களாக பட்டிதார்/ படேல் சமூகத்தினர் இருந்தாலும், அவர்கள் பொருளாதார பலத்தினை வேகமாக இழந்து வருகின்றனர் என்ற உண்மையை மறுப்பதற்கில்லை. பாஜக அரசாங்கத்தின் ஏகபோக ஆதரவு, கார்ப்பொரேட் ஆதரவு கொள்கைகளின் விளைவாக படேல் சமூகமானது வசதி படைத்தவர்கள் –வசதியற்றோர்கள் என இரண்டாக பிளவுபட்டுக் கொண்டிருக்கிறது. எனவேதான் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, தான் தீவிரமாக எதிர்த்த இடஓதுக்கீட்டை தாங்களே கோரும் சூழ்நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.*

*இதனால் கிளர்ச்சியாளர்களுக்கு அடிப்படைக் கொள்கை இருக்கின்றது என்று பொருளல்ல. அச்சமூகத்தின் பெருகிவரும் வசதியற்றவர்களை சமாதானப்படுத்துவதற்கு இடஓதுக்கீடு கோரிக்கை அவர்களுக்கு ஒரு தேவையாக இருக்கிறது. வேலையின்மை அதிகரித்து, வாழ்க்கைக்கும் வேலைக்குமான பாதுகாப்பில்லாமல், வறுமை இடைவெளி இன்னும் அதிகரித்து கீழ்நோக்கி சென்றுகொண்டிருக்கும் இம்முதலாளித்துவ பொருளாதாரத்தின் முன்பு வறியவர்களுக்கு இது ஓர் வாழ்வதற்கானப் போராட்டமாகும். வசதிபடைத்த படேல் சமூகத்திலுள்ளோருக்கும் இது ஒரு வாழ்க்கை போராட்டம்தான். ஏனெனில் தங்களது சமூகத்திற்குள் வளர்ந்துவரும் அதிருப்தியானது வசதிபடைத்தவர்களின் மேலாதிக்கத்திற்கும் உரிமைகளுக்கும் ஆபத்த விளைவித்திடுமோ என்ற ஓர் வாழ்க்கைப் போராட்டமாகும்.*

*இந்நெருக்கடியானது, இவர்களுக்கு மட்டுமே உரித்ததானதல்ல. சாதி அல்லது சமூகம் எதுவாக இருந்தாலும், அவர்களது மாநிலத்தில், ஏன் இந்நாடு முழுவதிலுமுள்ள பொதுமக்களின் அனைத்துப் பிரிவினரையும் இது பாதிக்கின்றது. இந்த இட ஓதுக்கீடு அவர்களுக்கு வேலைவாய்ப்பையும் பாதுகாப்பான வேலையையும் உருவாக்கித்தருமா? இந்த இடஓதுக்கீடு பாஜக கட்சியின் நில அபகரிப்பு கொள்கையை தடுத்தி நிறுத்தி, படேல் சமூகத்தவரின் நிலங்கள் மேலும் பறிபோகாமலிருக்க உத்தரவாதம் தருமா? இத்தகைய இட ஓதுக்கீடு கார்ப்பொரேட் – ஏகபோக பெரும் தொழிற்சாலைகள் மற்றும் அவர்களது பலகோடி ரூபாய்கள் முதலீட்டின் தாக்குதல் முன்பாக சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் நீடித்து நிலைத்திருக்க உதவி புரியுமா? இவை அனைத்திற்குமான ஒரே பதில் 'இல்லை' என்பதுதானாகும்.*

*படேல் சமூகத்தவர்களிலுள்ள பாடுபடும் மக்கள் இவ்வுண்மைகளை உணர வேண்டும். வேலைவாய்ப்பை உருவாக்கிட உண்மையில் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்திட, பொதுத் துறை நிறுவனங்களின்கீழ் உழைப்பாளர்மிகு (Labour Intersive–லேபர் இன்டென்சிவ்) தொழில் துவங்கிட வேண்டுமெனும் கோரிக்கைகளை முன்வைத்து அமைப்பு ரீதியிலான மாபெரும் போராட்டங்களை கட்டும் கடமையினை அவர்கள் தயங்காமல் மேற்கொள்ளவேண்டும். அதேசமயம் இதனை செய்யத் தவறும் உண்மையான எதிரியான இந்நாட்டின் முதலாளித்துவ அமைப்பை அடையாளம் கண்டு கொள்ளவும் வேண்டும்.*

*மேலும், இடஓதுக்கீட்டு பிரச்சினையில் அரசாங்கமானது நேர்மையாகவும் தீவிரமாகவும், அடிப்படையில் பொருளாதார அம்சத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஒருமனதாக எழுப்பிட வேண்டும். இம்முயற்சியில் இடஓதுக்கீடுக்கான போராட்ட களத்தில் படேல் சமூகத்தவர் அல்லது எவராயிருப்பினும், சுரண்டி ஏமாற்றி அடக்கியாள்வதற்காக உருவாக்கப்பட்ட இந்த அமைப்பிற்கு எதிராக, இதே காரணத்திற்காக போராடும் நாடு முழுவதிலுமுள்ள அவர்களது பிற சமூகங்களின் சகோதரர்களுடன் தோளோடு தோளாக நின்று போரிட, அவர்கள் தங்களை தயார் செய்துகொள்ள வேண்டும்.*

*மக்களின் ஒற்றுமையானது எவ்வாராகிலும் கண்ணின் கருமணி போல் பாதுகாக்கப்பட வேண்டும். அத்துடன் நாம் அடைய விரும்பும் ஒற்றுமையை பாதுகாத்திட உதவி புரியக்கூடியது, நம் நாட்டின் ஒரே புரட்சிகர கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மட்டுமே என்பதை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.*

*இடஓதுக்கீடு அரசியலின் மோசடி விளையாட்டிலிருந்து விடுவித்து மக்களுக்கு சில நிவாரணங்களை பெற்றுத்தரவல்ல மாற்று நீரோட்டம் புரட்சிகர சக்தியின் தலைமையில் கட்டப்படுகின்ற ஒன்றுபட்ட உண்மையான இடதுசாரி ஜனநாயக இயக்கம் இதுவேயாகும்.*

## மானியத்தின் பெருங்கதை

*மக்களுக்கான மானியத்தை வெட்ட வேண்டுமென்றும் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச்செல்ல இது தவிர்க்கவியலாத ஒன்றென்றும், வளர்ச்சியை தூண்டிவிடுமென்றும், முன்னேற்றத்திற்கு உறுதுணையாயிருக்குமென்றும், "தேவையற்ற" செலவினச்சுமையை அரசாங்கம் தன் தோள்களில் சுமப்பதிலிருந்து விடுவிக்குமெனவும் முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள்–கட்டுரையாளர்கள்–அமைச்சர்கள்–தங்களை வல்லுனர்களென நினைத்துக்கொள்பவர்கள் கூறுவது இப்போது வழக்கமாயிருக்கிறது.*

*ஆனால், அவர்களை சங்கடப்படுத்தும் வகையில் மானியம் பற்றிய புள்ளி விபரங்கள் பற்றிய ஆய்வு அவர்கள் இவ்வாறான வாதத்தினை முன்வைப்பதின் நோக்கத்தினை பட்டவர்த்தனமாக்கியிருக்கிறது. கீழ்க்கண்ட புள்ளி விபரங்களை கவனியுங்கள்:–*

| | ஏழைகளுக்கான மானியம் | கார்ப்பொரேட் கம்பெனிகளுக்கான விலக்கு |
|---|---|---|
| | ( கோடிகளில் ) | |
| *2009–10* | *1,05,579* | *4,82,432* |
| *2010–11* | *1,08,667* | *4,59,705* |
| *2011–12* | *1,34,211* | *5,33,583* |
| *2012–13* | *1,79,554* | *5,66,235* |
| *2013–14* | *2,20,972* | *5,72,923* |
| *2014–15* | *2,51,397* | *5,90,000* |

*மேற்கண்ட புள்ளி விபரங்களின்படி உணவு, எரிபொருள், உரம் இன்னும் பிறவற்றிற்கான மானியத்தைக்காட்டிலும் 5 மடங்கு மானியமானது, வரிச்சலுகை மற்றும் தள்ளுபடியென தொழில் குடும்பங்களுக்கும் கார்ப்பொரேட் கம்பெனிகளுக்கும் வழங்கியிருப்பது நன்கு விளங்கும்.*

## 80 லட்சம் பேர் பட்டினியால் மடிந்து கொண்டிருக்கையில் ஏகாதிபத்திய சுறாக்கள் போர்தளவாடங்கள் உற்பத்தி செய்திட வானளாவிய தொகையினை செலவழிக்கின்றது

*ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதிலும் கிட்டத்தட்ட 80 லட்சம் பேர் பட்டினியால் சாகின்றனர். உலகத்தில் பட்டினியை ஓர் முடிவிற்குக்கொண்டு வர வேண்டுமானால் 30 லட்சம் கோடி டாலர்கள் தேவைப்படுகிறது. ஆனால், ஏகாதிபத்திய சுறாக்கள் கோடான கோடி மக்கள் மீது லாப வணிகம் செய்திடும் அவர்களது தீராததாகத்தினை தீர்த்துக்கொள்ள வேண்டியும், ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலின் அரவைச்சக்கரத்தில் அழுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் கடைசித்துளி ரத்தத்தையும் உறிஞ்சியெடுப்பதற்காக பொருளாதாரத்தை ராணுவமயப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.*

*உலக ஏகாதிபத்திய–முதலாளித்துவத்தின் தலைவனான அமெரிக்க ஏகாதிபத்தியமானது பாதுகாப்பிற்காக 737 லட்சம் கோடி டாலர்களை, அதாவது உலகத்தின் பசியை அழித்தொழிக்க எவ்வளவு தேவைப்படுமோ, அதைவிட 250 சதவீத தொகையை செலவழிக்கின்றது. 'ஜனநாயகத்தை' துப்பாக்கிப் படகுகளில் ஏற்றுமதி செய்யும் உலக வழிப்பறி கொள்ளையனின் உண்மை முகம் இதுதான்! (ஆதாரம்: உலக பட்டினி – கல்வி சேவை – 2015)*

## கடனை கட்டத்தவறும் ஏகபோக குடும்பங்கள் மற்றும் கார்ப்பொரேட் கம்பெனிகளுக்கு மக்கள் மானியமளிக்கின்றனர்

*உயர்ந்துவரும் விலைவாசியின் சுமை, அதிகரித்துவரும் மறைமுக வரி மற்றும் பல்வேறு பிற நிதிநெருக்கடி கொடுமையினால் நாளுக்கு நாள் ஓட்டாண்டிகளாகி வருபவர்கள் பொதுமக்களாகிய நாம் தான் என்பது உண்மையே. அரசாங்கமானது உணவு, உரம், எரிபொருள் ஆகியவற்றிற்கான மானியங்களை ரத்து செய்து, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான பட்ஜெட்டை குறைத்திடுவது, அதற்குப்பதிலாக நிதிநிலையை ஸ்திரப்படுத்துதல் என்ற பெயரில் ஏகபோக குடும்பங்கள் மற்றும் பகாசுர பன்னாட்டு கம்பெனிகளுக்கு இதுவரையில் 7 லட்சம் கோடி வரித்தள்ளுபடி மற்றும் சலுகைகளை வழங்கியிருப்பதும்கூட உண்மையே. இருப்பினும் இப்போது நாம் இந்த நிதியாட்சிகாரர்களுக்கு மேலும் மானியம் வழங்கிட நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.*

*பலனளிக்கும் முதலீட்டினை செய்கிறோம் என்ற சாக்கைக் காட்டி, இத்தகைய ஆட்சியதிகாரம் கொண்டவர்கள் வங்கிளிடமிருந்து பெருந்தொகையினை கடனாக பெற்றிருக்கின்றனர். ஆனால் இப்போது 3.09 லட்சம் கோடிகளுக்கதிகமாக மதிப்புள்ள கடனை அவர்கள் திரும்பிக்கட்டவில்லை. இந்த திரும்ப கட்டப்படாத கடன் தொகையானது வங்கிகளின் செயல் படாத சொத்துக்கள் ( நான் பெர்ஃபாமிங் அசெட்ஸ் என்பிஏ ) என அழைக்கப்படுகிறது. இந்த என்பிஏ தொகையில் 2.67 லட்சம் கோடியானது பொதுத்துறை வங்கிகளை சேர்ந்ததாகும். பாஜக கட்சியின் மத்திய நிதியமைச்சரே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.*

*( மற்றுமொரு ஆதாரம், செயல் படாத சொத்துக்களின் (என்பிஏ) தொகை 6.0 லட்சம் கோடிகளுக்கு அதிகமாகவும் அல்லது மொத்த முன்பனத்தில் 10 சதவீதமாக இருக்குமென கூறுகிறது – ஆனந்த பசார் பத்திரிகா, பெங்காளி டெய்லி , 08.11.2014 )*

*பெரும்பாலும் வேண்டுமென்றே கடனை கட்டத்தவறும் பன்னாட்டு கம்பெனிகளை தண்டிக்கும் பழக்கம் முதலாளித்துவ இந்தியாவில் இல்லை. ஆகவே இதனால் பாதிக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகளின் இழப்பை சரிக்கட்டிட அரசாங்கமானது இப்போது 1.80 லட்சம் கோடிக்கும் மேலாக சிரமத்திலிருக்கும் வங்கிகளுக்கு மறுமுதலீடு என்ற சொற்பிரயோகத்தின் போர்வையில் மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட அரசாங்க கருவூலமான பொதுபணத்திலிருந்து வழங்கவிருக்கிறது. நம்ப முடியாத முரண்பாடு.*

*(ஆதாரம்: பிஸினஸ் டுடே, 21.08.2015)*

## காட்டுமிராண்டித்தனமான தாத்ரி கொலை

# தேர்தல் இலாபத்திற்காக மதத்தின் அடிப்படையில் நாட்டை துருவமயமாக்க ஆர்எஸ்எஸ் – பாஜக முயற்சிக்கின்றது

*தொலைதூரத்தில் உள்ள சிலிகான் வேலியில் பிரதமர் நரேந்திர மோடி டிஜிட்டல் இந்தியா பற்றி பெருமையாக பேசிக்கொண்டிருக்கையில், கடந்த செப்டம்பர் 28 அன்று டில்லியில் இருந்து 60 கிமீ தூரத்தில் உள்ள உத்திரப்பிரதேசத்தின், தாத்ரியில் உள்ள பிசாதா கிராமத்தில் ஜனநாயக இந்தியா கொலை செய்யப்பட்டது.*

*மாட்டிறைச்சியை உண்டனர் அல்லது தங்கள் வீட்டில் பிரிட்ஜில் மாட்டிறைச்சியை வைத்திருந்தனர் என்ற புரளி கிளம்பியதைத் தொடர்ந்து, முகமது அக்லாஹ், விவசாய கருவிகளை செய்யும் 52 வயது கொல்லர், அவரது வீட்டிலிருந்து வெளியே இழுத்து வரப்பட்டு அவரது குடும்பத்தார் முன்னிலையிலேயே ஒரு வெறிபிடித்த கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டார். அங்குள்ள கோயிலில் பக்தி பாடலை ஒலிபரப்பிக்கொண்டிருந்த ஒலிப்பெருக்கியில் திடீரென, அவரது குடும்பம் மாட்டு கன்றுக் குட்டியை அடித்து இறைச்சியை உண்டனர் என்று அறிவிப்பு வெளியானது. உடனடியாக அவர்கள் மீது மிருகத்தனமான தாக்குதல் நடைபெற்றது. அவரது மகன் கவலைக்கிடமாக உள்ளார், அவரது உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள் போராடிவருகின்றனர். அவரது மனைவி, 82 வயது அம்மா, அவரது மகளும் இந்த குண்டர்களின் தாக்குதலிலிருந்து தப்பவில்லை. அவரது மகள் வீடுவீடாகச் சென்று உதவி கேட்கிறார், ஆனால் யாரும் உதவ முன்வரவில்லை. தங்களது வீட்டில் இருப்பது ஆட்டுக்கறிதானே தவிர அது மாட்டிறைச்சி அல்ல என்று கூக்குரலிடுகிறார். ஆனாலும்கூட யாரும் அதைக் காதில் வாங்கவில்லை, கோபம் குறையவில்லை, கொடூரத் தாக்குதலையும் நிறுத்தவில்லை.*

*மாட்டிறைச்சி சாப்பிடும் இந்துக்கள் இந்தியாவில் ஏராளமானோர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் யாரும், கொல்லப்படுவதில்லை என்பது மட்டுமல்ல, தாக்கப்படுவதோ அல்லது துன்புறுத்தப்படுவதும் இல்லை. ஆக, அங்கே அந்த குடும்பத்தில் சாப்பிட்டது மாட்டிறைச்சியா, ஆட்டிறைச்சியா என்பது பெரியவிஷயமல்ல, அங்கே, உள்ளூர் பாஜக தலைவரின் மகன் தலைமையில் சென்றதாகக் கூறப்படும் இந்து வெறிபிடித்த கும்பலுக்கு ரத்தம், முஸ்லீம் ரத்தம் வேண்டும். தங்களை இந்துக்கள் என்று கூறிக்கொண்ட இரண்டு இளைஞர்கள் வந்து அழுத்தம் கொடுத்ததாலேயே தான் இந்த தவறான செய்தியை அறிவித்ததாக அந்த கோவில் பூசாரி ஒப்புக்கொண்டதை இங்கே குறிப்பாக கவனிக்க வேண்டும். எனவே, இந்த காட்டுமிராண்டித்தனமான கொலை திட்டமிட்டு நடத்தப்பட்டது.*

*மத நடைமுறைகளின் அடிப்படையில் மக்களது உணவுப்பழக்கத்தை வைத்து மக்களிடையே பிளவை உண்டாக்கும் நயவஞ்சக நச்சு பிரச்சாரத்தின் விளைவாகத்தான் இந்த கொலை நடந்தேறியுள்ளது. பாஜக–ஆர்எஸ்எஸ்ஸின் இந்து மத வெறிபிடித்த சங் பரிவார் அமைப்புகள் குறுகிய தேர்தல் ஆதாயத்திற்காக நாட்டையே மதரீதியாக பிளவுபடுத்தி ஒற்றை மதமாக்கி, கொடூரமான முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு எதிராக உழைக்கும் மக்கள் ஒன்றுபட்ட இயக்கத்தை வளர்த்தெடுக்கும் வாய்ப்புகளை சீர்குலைக்கவேண்டும் என்ற ஒற்றை திட்டத்திற்கு இசைவாக மதமோதல்களை நடத்தவேண்டும் என்பது தான் இந்த கொலைவெறித் தாக்குதலின் பின்னால் உள்ள நோக்கம் என்பது தெளிவாகிறது. எனவே இத்தகைய திட்டமிட்ட சம்பவங்கள் மூலம் காட்டுத் தீபோல் பரவும் மத மோதல்களை பற்ற வைப்பதற்கான திட்டம் இருந்துவருகிறது. தாத்ரி சம்பவத்திற்குப் பிறகு உத்திரப்பிரதேசத்தில் உள்ள ஒரு சிறு நகர கோவிலின்மீது ஒருவன் மாட்டிறைச்சியை வீசினான், அவனை அங்கிருந்த மக்கள் பிடித்தனர். பர்தா அணிந்திருந்த அவன் ஆர்எஸ்எஸ் ஐ சேர்ந்தவன் என்று கூறப்படுகிறது. இச்செய்தி பேஸ்புக் மற்றும் டுவிட்டரில் பரவி வருகிறது. இதற்கு முன்பும்கூட மதக் கலவரங்களைத் தூண்டியவர்கள் இந்து கோவில்கள் மீது மாட்டிறைச்சியை வீசுவது அல்லது பன்றியின் இறைச்சியை மசூதியில் வீசியிருக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்டு 2 அன்று, டில்லிக்கு அருகே உள்ள நாசாஃப்கர்ஹ் சாவ்லா கிராமத்தின் காவல்துறை செக்போஸ்ட் அருகே ஒரு சிறிய லாரி ஓட்டுநர், அந்த வாகனத்தில் இறந்த பசு மற்றும் எருமை மாடுகளை ஏற்றிச் சென்றதால், இதேபோன்று இருசக்கரவாகனத்தில் வந்தவர்களால் குத்திக் கொல்லப்பட்டார். அவரை 'முஸ்லீம் பசு கடத்தல்காரர்' என்று நினைத்துதான் கொன்றதாகவும், ஆனால் உண்மையில், தெற்கு டில்லி நகராட்சி ஒப்பந்ததாரர் என்றும் அருகிலுள்ள மாட்டுத்தொழுவத்திலிருந்து பசு மற்றும் எருமைகளை சுடுகாட்டிற்கு எடுத்து சென்ற அவரது பெயர் சங்கர் குமார், அவர் ஒரு இந்து என்பதும் தெரிய வந்தது.*

*சங் பரிவாரின் முஸ்லீம் எதிர்ப்பு வெறி இந்த அளவு பைத்தியக்காரத்தனமாக உள்ளது. தாத்ரி துயர சம்பவத்திற்குப் பின்பு நம்பிக்கை ஒளிக்கீற்றாக ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. ஆயுதங்களுடன் சுற்றித்திரிந்த இந்துத்துவா வெறியாளர்கள் அந்த பகுதியில் குடியிருக்கும் உள்ளூர் முஸ்லீம் குடும்பத்தினர் 70 பேரை தாக்க வருவதற்குள் அப்பகுதியில் வசிக்கும் இந்துக்கள் தங்களது உயிரையும் துச்சமென மதித்து அவர்களைத் தப்பிக்க உதவி செய்தனர். இந்த மனிதாபிமான இந்துக்கள் அதோடு நிற்காமல் ஆளில்லா முஸ்லீம் வீடுகளுக்கும் பாதுகாப்பளித்தனர். ஆக சாமானிய மக்களிடையே, அருகருகே வசிக்கும் மக்களிடையே இந்து முஸ்லீம் பிளவு என்பது இல்லை. ஒருவரது உயிருக்கு ஆபத்து என்றஉடன் உடனடியாக காப்பாற்றும் எண்ணமும் இருக்கும் வகையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது தெளிவாகிறது.*

*இத்தகைய மதவெறித் தூண்டல்களும் கொலைகளும் நடைபெறுகையில் நாட்டின் பிரதமர் மோடி சற்றும் வாய்திறக்காமல் மௌனியாக உள்ளார். தாத்ரி கொலை சம்பவத்திலும் அவர் மௌனமாக இருந்தார்.*

*அவரது நம்பிக்கைக்குரிய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 'நாட்டின் மத அமைதிக்குக் குந்தகம் விளைவிக்க முயற்சிப்பவர்கள் மீது மாநில அரசோ அல்லது மத்திய அரசோ மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கும்' என்று கூறினார். ஆனால் அது எச்சரிக்கை என்பதை விட அது ஒரு சம்பிரதாய அறிக்கையாகவே தென்பட்டது, ஏனெனில் இதுவரை இந்தக் கொலைக்கு மூளையாகச் செயல்பட்டவர் கைது செய்யப்படவே இல்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா, அல்லது இதற்கும் முன்பு இதேபோன்ற பல மத மோதல் கொலைகளில் ஈடுபட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதைப் போன்று 'போதிய நேரடி சாட்சியங்கள் இல்லை' என்று கூறி விடுதலை செய்யப்படுவார்களா என்பது போகப்போகத்தான் தெரியும்.*

*தாத்ரி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளவர்கள் எல்லாம் 'அப்பாவி குழந்தைகள்' என்றும் அவர்கள் மாட்டிறைச்சி உண்ட மாபெரும் குற்றத்தைக் கண்டு 'உணர்ச்சிவசப்பட்டுள்ளனர்' என்றும் பாஜகவின் முன்னாள் எம்எல்ஏ ஏற்கனவே தெரிவித்துள்ளார். அக்லாஹ் கொலை தொடர்பாக 'அப்பாவிகள் மீது வழக்கு புனையப்பட்டால்' 'தக்கபதிலடி' கொடுப்போம் என்று பாஜக எம்எல்ஏவும் முஷாபர்நகர் கலவரத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள வருமான சங்கீத் சோம் பகிரங்கமாக எச்சரித்துள்ளார்.*

*அக்லாஹ்–வை கொன்றவர்கள் மிகவும் பண்பாடுமிக்கவர்கள் ஏனெனில் அவர்கள் அக்லாஹ்–வின் 17 வயது மகள் மீது சுண்டு விரலைக்கூட வைக்கவில்லை என்று மத்திய கலாச்சாரதுறை அமைச்சர் மகேஷ் சர்மா தாத்ரி கொலையை நியாயப்படுத்தி மிகவும் கீழ்த்தரமாக போயுள்ளார். ஆதிக்கமுள்ள தாக்கூர்களின் உணர்வுகளைப் புண்படுத்த நினைத்தால் அதற்குரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று முன்னாள் பாஜக எம்எல்ஏ நவாப் சிங் நகர் மிரட்டியுள்ளார். பசுவைக் கொல்பவர்களைத்தான் கைது செய்ய வேண்டுமே தவிர அப்பாவி முஸ்லீம்களைக் கொன்றவர்களை அல்ல என்று உள்ளூர் பாஜக தலைவர் விசித்ரா தோமர் கூறியுள்ளார். இந்துக்களின் உணர்வுகளை முஸ்லீம்கள் மதிக்கத் தவறினால் வன்முறை தவிர்க்கமுடியாதது என்று பாஜகவின் மேற்கு உத்திரப்பிரதேச பிரிவின் துணைத் தலைவர் ஸ்ரீசந்த் ஷர்மா கூறியுள்ளார். பாஜக தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த படுபாதகக் கொலையைப் பற்றி கருத்துக் கூறுகையில் மத வெறியை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்ல ஏற்கனவே முயற்சித்து வருகின்றனர். முஸ்லீம்களையும் கிறிஸ்துவர்களையும் கட்டாயமாக இந்து மதத்திற்கு மாற்றுவதற்காக 'கர் வாப்சிக்காக' ஒரு குழுவை அமைத்துள்ள, மோசமாகப் பெயரெடுத்த பாஜக எம்பி யோகி ஆதித்யாநாத் பிசாதா கிராமத்திலுள்ள இந்துக்களுக்கு 'துப்பாக்கி' உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக பகிரங்கமாக அறிவித்துள்ளார். கடந்த பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக முஷாபர்நகரில் அவர் வெறுப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டதால் 2013இல் கொலைவெறி மத வெறிக் கலவரத்திற்குக் காரணமாக அமைந்தது என்று அவர்மீது குற்றச்சாட்டு பதிவாகியுள்ளது. சாக்ஷி மகராஜ், மற்றொரு மதவெறிபிடித்த பாஜக எம்பி எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுவது போல், 'நமது தாயைக் கொல்ல ஒருவர் முயன்றால் நாங்கள் அமைதியாக இருக்கமாட்டோம். நாங்கள் கொல்வதற்கும் கொல்லப்படுவதற்கும் தயாராக இருக்கிறோம்' என்று கூறியுள்ளார். மக்களின் மிகக் கொடிய எதிரிகளான இவர்கள் மனிதனின் உயிரைக் காட்டிலும் மாட்டின் உயிர் மிகவும் புனிதமானது என்று கூறுவதற்குக்கூடத் தயங்கமாட்டார்கள்.*

*2002இல் ஹரியானாவில் உள்ள ஜ்ஹாஜர் எனுமிடத்தில் வசதிபடைத்த உயர்ஜாதி இந்துக்களின் ஆதரவுபெற்ற ஒரு வெறிபிடித்த கும்பல் பொருளாதாரரீதியாகவும் சமூகரீதியாகவும் பின்தங்கிய தலித் குடும்பங்களைச் சேர்ந்த 5 பேரைக் கொன்றது. இன்று மோடி அரசாங்கத்தை தாங்கள்தான் வழிநடத்துகிறோம் என்று சொல்லத்தயங்காத ஆர்எஸ்எஸ்ஸின் மூத்த உறுப்பினரும் அன்றைய விஷ்வ ஹிந்து பரிஷத்தின் தலைவருமான கிரிராஜ் கிஷோர் சிங் அவர்களிடம் 'தலித்துகளை விட பசுவின் உயிர் முக்கியமானதா?' என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் 'எங்கள் சாஸ்திரங்களின்படி பசு மிகவும் முக்கியமானது' என்று பதிலளித்தார். இந்துத்துவா ஆதரவு பரப்புரையாளர்களின் கருத்து இந்த அளவு நச்சு கலந்துள்ளது. இரண்டு சமூக மக்களுக்கிடையே, தீர்க்கமுடியாதபடி, ஒன்றிணையமுடியாதபடி, உறவை சீர்குலைக்கவேண்டும் என்பதற்காகவே அவர்கள் இத்தனை முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர்.*

*அக்லாஹ்–இன் கொலைக்கு ஆர்எஸ்எஸ்–பாஜக தான் காரணம் என்றாலும், சமாஜ்வதி கட்சி தலைமையிலான மாநில அரசாங்கத்தின் பங்கும் கவனிக்கத்தக்கதாக உள்ளது. கொலையாளிகளை கைதுசெய்வதற்குப் பதிலாக பலியானவரின் வீட்டிலிருந்து கிடைத்த கறி ஆட்டுக்கறியா அல்லது மாட்டுக்கறியா என்பதை உறுதிப்படுத்தும் சோதனையை காவல்துறை மேற்கொண்டு வருவது மிகுந்த அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது. ஆர்எஸ்எஸ்–பாஜகவும் அவர்களது வெறிபிடித்த மதவாத இந்துத்துவா கூட்டாளிகளும் பாராளுமன்ற அரசியலில் ஆதாயம் பெறுவதற்காக ஆளும் இந்திய முதலாளித்துவவாதிகளின் ஆதரவைப் பெற்றுள்ளனர். அதே வேளையில் பிராந்திய முதலாளித்துவ கட்சியான சமாஜ்வாதி கட்சியும் வாக்கு வங்கி அரசியலில் ஆதாயம் பெறுவதற்காக சாதிய–மத பிரிவைத் தூண்டுகின்றனர். எனவேதான் இத்தகைய கொடூரமான சம்பவங்களிலிருந்து ஆதாயம் பெறுவதற்கு தாங்களும் மதவாதிகள் என்று காட்டிக்கொள்ள இந்த கட்சிகள் முயற்சிக்கின்றன. இந்த மோசமான அரசியல் தாத்ரி கொலையிலும் நடைபெற்றுவருகிறது.*

*தாத்ரி கொலை சம்பந்தமாக வாயே திறக்காமல் மௌனம் காத்துவந்த பிரதமர் நரேந்திர மோடியின் பசுவதை தொடர்பான கருத்துக்கள் ரகசியமானது ஒன்றுமல்ல. 2012இல் ஜெயின் சர்வதேச வர்த்தக அமைப்பு, ஜெயின் தொழிலதிபர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களின் உலகளாவிய அமைப்பு, ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், அன்றைய குஜராத் முதலமைச்சர் மோடி பேசியதாவது 'இந்தியாவில் பிங்க் புரட்சியைக் கொண்டு வந்து மாட்டிறைச்சியை உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்வோம் என்று மத்திய அரசாங்கம் கனவு கண்டுவருகின்றது. இந்த ஆண்டு உலகின் மிகப் பெரிய மாட்டிறைச்சி ஏற்றுமதியாளராக இந்தியா*

*தொடர்ச்சி 8ம் பக்கம்*

## பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் மீது தொடர் கொலைத் தாக்குதல்

# மத அடிப்படைவாத சிந்தனைகளுக்கும் கொடூரக் கொலைகளுக்கும் எதிராக மக்கள் கண்டனக்குரல் எழுப்பவேண்டும்

1ம் பக்கத் தொடர்ச்சி

அவர் எதிர்த்தார். இளைஞர்களின் மனதில் கோட்சேவைப் போற்றித் துதிக்கும் எண்ணத்தை வேரூன்றவைக்கும் இவர்களின் முயற்சிக்கு எதிராக தொடர்ந்து எச்சரிக்கை விடுத்துவந்தார். இந்துத்துவ வாதிகளும் மராட்டிய தேசிய வெறியர்களும் இயற்கையாகவே இவரை எதிர்த்தனர். மஹாராஷ்டிராவில் புனா, சங்ளி ஆகிய பகுதிகள் பிராமண பழமைவாதத்தின் அடித்தளமாகவும் வி டி சர்வார்கர், எம் எஸ் கோல்வால்கர் ஆகிய ஆர்எஸ்எஸ்ஸின் தத்துவகர்த்தாக்கள் பரப்பிய இந்து தேசியம் என்ற மதவெறி கோட்பாட்டின் பிறப்பிடமாகவும் இருக்கின்றன என்பது இங்கு நினைவு படுத்தப்பட வேண்டும். எனவே, அப்பகுதியில் மதச்சார்பின்மை மற்றும் முற்போக்கு சிந்தனையை அம்மக்களிடையே உருவாக்கி, மிகவும் மதிக்கத்தக்க மனிதநேய சமூக சீர்திருத்தவாதியான மகாத்மா என்றழைக்கப்படும் ஜோதிபா பூலே போன்றோருக்கு மக்கள் மனதில் ஒரு இடத்தை ஏற்படுத்துவதை இந்துத்துவவாதிகள் 'தமக்கு விரோதமான' செயலாகக் கருதுகின்றனர். ஆக, இவர்களைப் பொறுத்தவரையில் டாக்டர் பன்சாரே களத்திலிருந்து அகற்றப்படவேண்டும். மிகச் சரியாக அதுவே நடந்தது. அவர் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### டாக்டர் கல்புர்கி கொலை

அடுத்து கொலைக்குத் தேர்தெடுக்கப்பட்ட இடம் கர்நாடகாவின் தார்வாட் நகராகும். இம்முறை வரிசையில் இருந்தவர் கர்நாடகாவின் தலைசிறந்த எழுத்தாளரும், ஆராய்ச்சியாளரும் தேசியவாதியும் முன்னாள் கன்னட பல்கலைக்கழக துணைவேந்தருமான டாக்டர் எம் எம் கல்புர்கியாவார். இவர் பல சாகித்ய அகாதெமி விருதுகளையும் வென்றிருக்கிறார். தங்களை அவரின் மாணவர்கள் என்று சொல்லிக்கொண்டு வீட்டில் நுழைந்த ஆயுதந் தாங்கிய கொலையாளிகள் அவரைச் சரமாரியாகச் சுட்டனர். நொடிப் பொழுதில் சம்பவ இடத்திலேயே அவர் இறந்தார்.

இந்து வெறியர்களின் கோபத்திற்கு டாக்டர் கல்புர்கி ஆளானதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. பிறப்பால் இவர் லிங்காயத் சமூகத்தைச் சார்ந்தவர். லிங்காயர்கள் 12வது நூற்றாண்டைச் சார்ந்த தத்துவஞானி பசவன்னாவை தங்கள் கடவுளாக குருவாக வணங்குகின்றனர். மதத்திற்கும், மத பழக்கங்களுக்கும் பிராமண சடங்குகளுக்கும் எதிரானவர் பசவன்னா அவர்கள். இவரின் தத்துவத்தை உண்மையில் எடுத்துக்கொண்டால், லிங்காயர்களை இந்துக்கள் என கருதவே முடியாது என பல ஆண்டுகள் ஆராய்ச்சிக்குப்பின் டாக்டர் கல்புர்கி சுட்டிக்காட்டினார். கர்நாடகா ஓட்டுவங்கி அரசியலில் குறிப்பிட்ட அளவு தனக்கென கொண்டு அதிகாரத்தை அனுபவிக்கும் செல்வாக்கு மிகுந்த லிங்கா சமூக தலைவர்களை இந்த ஆய்வு எரிச்சல்மூட்டியது. இந்து சமூகத்திலிருந்து லிங்கா சமூகத்தினரை பிரித்துக் காட்டினால், பின், லிங்கா மக்களும் இந்து ஓட்டுவங்கியின் உட்பகுதியினரே எனக்காட்டி பாராளுமன்ற ஓட்டு அரசியலில் ஆதாயம் அடைந்து அதிகாரத்தை அனுபவித்து வரும் தலைவர்கள் அதனை இழக்கவேண்டிவரும். மேலும், உருவ வழிபாடு குறித்து டாக்டர் கல்புர்கி சொன்ன சில கருத்துக்களும் விஷ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங்தள் போன்ற இந்து வெறியர்களின் கோபத்தைத் தூண்டியது. இந்த அமைப்புகள் மற்றும் பிற சங் பரிவாரத்தின் ஊதிய அட்டவணையில் இருக்கும் விஷமிகள் அவர்மீது கற்களையும் பாட்டில்களையும் வீசி தமது வெறுப்பைக் காட்டினர். அவரது பொதுக்கூட்டங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்தினர். அவரது உருவ பொம்மையை எரித்தனர். இந்துத்துவத்தை அவமதித்து சமூகத்தை தவறாக வழிநடத்துவதில் திருப்தி அடைபவர்கள் நிரந்தரமாக சிறையில் அடைக்கப்படவேண்டும் என ஒரு விஎச்பி தலைவர் சான்றுபடக் கூறியிருக்கிறார். இந்துத்துவத்தை எள்ளி நகையாடுபவர்கள் நாயைப்போல் கொல்லப்படுவார்கள் என்று வெளிப்படையாக பேசும் அளவிற்கு மற்றொரு பஜ்ரங்தள் தலைவர் துணிந்திருக்கிறார்.

டாக்டர் கல்புர்கியின் கொலைக்குப் பின் மற்றுமொரு கல்வியாளரும் பகுத்தறிவாளருமான மைசூர் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஸ்ரீ கே எஸ் பகவான் என்பவரை அடுத்த இலக்காக இந்த வெறியர்கள் பறைசாற்றியிருக்கின்றனர். இவர் இந்து அடிப்படைவாதிகளையும் வெறியர்களையும் மிகக் கடுமையாக விமர்சித்து வருபவர். டாக்டர் கல்புர்கியின் கொலைக்குப் பின்னணியில் இருப்பவர்கள் தாங்கள் தான் என்பதையும் மறைமுகமாக இந்த பஜ்ரங்தள் தலைவர்கள் ஒப்புக் கொண்டுவிட்டனர். ஆனால் ஸ்ரீபகவான் இவர்களின் கொலைமிரட்டலுக்கு அஞ்சவில்லை. "நான் பயப்படவில்லை. மாறாக என்னைத் தாக்குபவர்கள் மீது வருத்தப்படுகிறேன். இவர்கள் ஒரு சிந்தனையாளரை அழித்துவிடலாம் – ஆனால் அவரின் சிந்தனைகளை அழித்துவிட முடியாது. இவர்களின் ஆக்ரோஷத்தை வழிநடத்துவது அறியாமையே. பிரதமர் தலையிட்டு இந்த நபர்களை எச்சரிக்க வேண்டும். –அவ்வாறு செய்யாமலிருப்பது மத்திய அரசாங்கத்தின் குறைபாடாகும். மத்திய அரசாங்கத்தின் மௌனம் அடிப்படைவாதிகளுக்கு தவறான சமிக்ஞையை கொடுக்கும்" என அவர் டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகைக்கு பேட்டியளித்திருக்கின்றார்.

மூடநம்பிக்கைகளை பழமைவாதத்தை பரப்புவதை புராண கதைகளை சரித்திரமெனக் காட்டுவதை மிகச் சரியாகக் கேள்விகேட்டு எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், சமூக சிந்தனையாளர்கள் பகுத்தறிவுச் சிந்தனையை உயர்த்த முனைகின்றனர். இவர்கள் தாக்கிக் கொல்லப்படுவதை பாஜக– ஆர்எஸ்எஸ்– சங் பரிவார் செய்யும் வெறித்தனமான இந்து மதவாத கண்ணோட்டம் செய்தவருகின்றது. ஆக, அரசியல் அமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் பேச்சுரிமை, கருத்தைத் தெரிவிக்கும் சுதந்திரம் ஆகியவற்றை வெளிப்படையாக நசுக்குகின்றனர். இதன் மூலம் தங்களின் ஃபாசிச முகத்தைக் காட்டுகின்றனர். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பகுத்தறிவுவாதிகள் எழுப்பும் அனைத்துப் பிரச்சினைகளை எதிர்கொண்டு விவாதித்தால் தம்மால் நிற்கமுடியாது என்பதை பிரதான இந்து அடிப்படைவாத அமைப்பினர் அறிவர். சித்தாந்தரீதியாக இந்துத்துவவாதிகள் திவாலாகிவிட்டனர். இவர்களின் இந்துத்துவ நிகழ்ச்சி நிரலே, உண்மையை மறைக்க குருட்டுத்தனத்தையும் படைமுறைப் படுத்தப்பட்ட (இயந்திரத்தனமான) சிந்தனையையும் வளர்ப்பதும் ஓட்டுவங்கி அரசியல் இலாபத்திற்காக உழைக்கும் மக்களை பிரிக்க மதத்தைப் பயன்படுத்துவதும்தான் என்பதை மேன்மேலும் மக்கள் விளங்கிக்கொண்டு வருகிறார்கள். எனவே, மோசமான இந்த இந்துத்துவ தத்துவத்தை எதிர்த்து சவால் விடுபவர்களையும் அறிவியல்பூர்வ சிந்தனையை உயர்த்திப்பிடிப்பவர்களையும் வாயை மூடச் செய்யும் ஒரே வழி, அவர்களைக் கொடூரமாகக் கொன்றுவிடுவதுதானாகும். மேலும், இந்துமத அடிப்படைவாத பாஜக அரசாங்கத்தில் இருப்பதால், பகுத்தறிவுவாதிகளின் தொடர் கொலையை அரங்கேற்றுது இவர்களுக்கு மிகவும் சௌகரியமாகி விட்டது.

### பங்களாதேசத்தில் இணையதள எழுத்தாளர்கள் தொடர் கொலை

இந்தியாவில் காட்சி இவ்வாறு இருக்கையில் அண்டை நாடான பங்களாதேசத்தைப் பார்த்தால் அங்கும் காட்சி மாறவில்லை. சிறிய எண்ணிக்கையினர் என்றாலும்கூட இணையதள எழுத்தாளர்கள் மிகவும் செயலூக்கத்துடன் இருக்கின்றனர். இஸ்லாம், இந்துமதம் உட்பட சமூகம், அரசாங்கம், அரசியல் கருத்துக்கள், போர்க்குற்றவாளிகளை விசாரணை செய்தல் போன்ற பலவற்றை பலமுறை விவாதிக்கின்றனர். எனவே அவர்கள் மதவாத வெறியர்களின் கோபத்திற்கு ஆளானார்கள்.

அவிஜித்ராய் என்பவர் 15 ஆண்டுகளுக்கு முன்பு வட அமெரிக்காவின் ஜியார்ஜியா மாகாணத்திற்கு குடிபெயர்ந்து வசித்து வருபவர். இவர் முக்தோ – மோனா (சுதந்திர மனது) என்ற இணையதள பிளாக் (blog) நடத்தி வருபவர் என தனது தாய் நாடான பங்களாதேசத்தில் அறியப்பட்டவர். அந்த பிளாக் மூலம் அனைத்துவகையான மத அடிப்படைவாத வடிவங்களை எதிர்த்து மக்கள் கருத்தை திரட்டி வருபவர். அவர் சென்ற பிப்ரவரி 26 அன்று தலைநகர் டாக்காவில் இரண்டு கொலைகாரர்களால் அரிவாளால் வீதியில் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்கு அல் கொய்தா இன் தி இந்தியன் சப்கான்டினென்ட் (AQIS) என்ற அமைப்பு பொறுப்பேற்றது. அல் கொய்தா, தலிபன், ஐஎஸ்ஐஎஸ் போன்றவை எல்லாம் இஸ்லாமிய வெறி மதஅடிப்படைவாத அமைப்புகள் என்பதை அனைவரும் அறிவர்.

பட்டப்பகலில் பலர் கண்களின் முன் அவிஜித் ராய் வெட்டி வீழ்த்தப்பட்டதைக் கண்டு மற்றுமொரு பங்களாதேச தேசியவாதியான, வேறொரு இணையதள பிளாக் நடத்திவரும் வாசிகுர் ரஃமான் பாபு என்பவர் துணிவுடன் அதைக் கண்டித்தார். மதச்சார்பற்ற தனது நாட்டில் சுதந்திர சிந்தனையை இந்த அடிப்படைவாதிகள் நெரித்து வருவதாக அவர் எழுதிச் சாடினார். அடுத்த நொடியிலேயே மார்ச் 30 அன்று அவர் வீட்டின் முன்பு இரண்டுபேரால் கத்தி மற்றும் மாமிசத்தை வெட்டும் கொடுவாள் கொண்டு வெட்டிக் கொல்லப்பட்டார். தெற்காசியாவில் அல்கொய்தாவின் பகுதியாக இருக்கும் அன்சர் உல் இஸ்லாம் அமைப்புடன் நெருங்கிச் செயல்படும் அன்சருல்லாஹ் பங்களா டீம் (ABT) அமைப்பின் அமைப்பாளர் ஒருவரும் அதன் நான்கு ஆதரவாளர்களும் வாசிகுர் கொலைக்கு குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

அடுத்து உயிரை விலையாகக் கொடுத்தவர் முக்த மோனா (சுதந்திர மனது) இயக்கத்தின் மற்றுமொரு இணையதள பிளாக் நடத்தும் அனந்த விஜய் தாஸ் என்பவர் ஆவார். மே 12 அன்று முகமூடி அணிந்த கொலையாளிகள் வீச்சரிவாள் கொண்டு இவரை கொன்றனர்.இதற்கு அல் கொய்தாவின் வட்டார அமைப்பான அன்சார் அல் இஸ்லாம் அமைப்பு பொறுப்பேற்பதாக அறிவித்தது.

அதேபோன்று, டாக்காவின் அருகில் இருக்கும் கோரன் நகர்ப்புறத்தில் வசிக்கும், நிலொய் நீல் என்ற புனைப்பெயரில் எழுதிவரும் நிலொய் சட்டர்ஜியை அவரது அடுக்குமாடிக் குடியிருப்பில் நுழைந்து ஆகஸ்டு 6 அன்று கொன்றனர். நிலொய் மத தீவிரவாதத்தை விமர்சனம் செய்தவர். மசூதிகளை குண்டுவைத்து தகர்ப்பதையும் எண்ணற்ற குடிமக்கள் கொல்லப்படுவதையும் கண்டித்தவர். ஃபேஸ் புக்கில் சமீபத்தில் தான் இரண்டு அடையாளம் தெரியாத நபர்களால் பின்தொடர்ந்து மிரட்டப்படுகிறேன் என அரசாங்க அதிகாரிகளுக்கு அவர் எழுதியிருந்தார். காவல்துறையை அணுகியும் அவர்கள் தனது புகாரை பதிவு செய்ய மறுக்கிறார்கள் என அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார். கடந்த இரண்டாண்டுகளாக பேராசிரியர் ஹுமாயூன் ஆசாத், அஹமத் ரஜிப் ஹைதர் மற்றும் பேராசிரியர் ஏகேஎம் ஷஃபியுல் இஸ்லாம் ஆகிய பகுத்தறிவு இணையதள பிளாக் எழுத்தாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் அல்லது சந்தேகத்திற்குரிய வகையில் இறந்துகிடந்தார்கள்.

அன்சருல்லாஹ் பங்களா டீம் ABT அமைப்பு "நாங்கள் மறப்பதில்லை, மன்னிப்பதுமில்லை" என்று எழுதி பகுத்தறிவுவாதிகள், இணையதள பிளாக் கருத்துரைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் பெயர் பட்டியலை தனது வலைதளத்தில் வெளியிட்டிருக்கின்றது. ஏபிடி அமைப்பின் வன்முறைச் செயல்பாடுகளை அல் கொய்தா அமைப்பு வெளிப்படையாகவே பாராட்டியிருப்பதுடன் கொலைக் குற்றம் சாற்றப்பட்ட அதன் செயல்வீரர்களை 'சர்வதேச சமூகத்தின் சிங்கங்கள்' என்று புகழ்ந்திருக்கிறது.

அதேசமயம், பட்டியலில் பெயரிடப்பட்ட பிளாக் கருத்துரைஞர்களும் இதற்கெல்லாம் அஞ்சவில்லை. "எங்களின் ஆயுதம் பேனா. அதை யார் மனதையும் புண்படுத்தாமல் பயன்படுத்த எங்களால் முடியும். மக்கள் தங்கள் உரிமைகளைப்பற்றி விழிப்புணர்வு கொள்ளவேண்டும் என்பதுவே எங்கள் விருப்பம். அவ்வுரிமைகளை யாரும் தமது கெட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்திவிடக் கூடாது என்பதற்காக" என்று பங்களாதேச பிளாக் கருத்துரைஞர் அனன்ய ஆசாத் கூறுகின்றார். இவர் பெயரும் கொலைப் பட்டியலில் இருக்கின்றது. அதனால் அவர் நாடு பெயர்ந்து ஐரோப்பாவில் வசிக்கின்றார். "இங்கும் நான் பாதிக்கப்பட மாட்டேன் என்று உங்களுக்கு நான் உறுதிகூற முடியாது. மத அடிப்படைவாதிகள் இங்கு வந்து என்னைக் கொல்வதாக மிரட்டியுள்ளார்கள். ...நான் எங்கு வசிக்கிறேன் என்று அவர்களுக்குத் தெரியும். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று என்னால் சொல்லமுடியாது. ஆனால்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் மீது தொடர் கொலைத் தாக்குதல்

# மக்களின் எதிர்ப்பு குரல் ஒரு சக்தி வாய்ந்த பகுத்தறிவு இயக்கமாக உருவெடுக்கவேண்டும்

6ம் பக்கத் தொடர்ச்சி

என் இறுதி மூச்சுவரை நான் எழுதிக் கொண்டி ருப்பேன் என உறுதியளிக்கிறேன்" என அப் பெண்மணி போற்றுதற்குரிய துணிச்சலுடன் கூறியிருக்கிறார்.

இவ்வாறாக ஒவ்வொரு இணையதள பிளாக் எழுத்தாளர்களும் நெஞ்சை உறையவைக்கும் வகையில் கொலைசெய்யப்படுகையில், பங்களா தேச அரசாங்கத்தின் பாத்திரம் கேள்விக்குரியதா கின்றது. நிலொய் கொலைசெய்யப்பட்டதை ஒட்டி, மத உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் எழுத வேண்டாம் என காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் எழுத்தாளர்களுக்கு ஆலோசனை சொல்லி யிருக்கிறார். "சுதந்திர சிந்தனையாளர்களுக்கு நான் போதிய மரியாதையை கொடுக்கிறேன். ஆனால் மத உணர்வுகளைப் புண்படுத்துவது நமது சட்டப் படி குற்றம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்" என அவர் பத்திரிகைப் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார். அடுத்த நிமிடமே, மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு என்ற சர்வதேசப் பிரச் சாரக் அமைப்பு அரசாங்கத்தை விமர்சனம் செய்து, "கொலை மிரட்டலைக் குறித்து காவல்துறையிடம் புகார் அளிக்கப்பட்ட பிறகும் பிளாக் எழுத்தர் களைப் பாதுகாக்கத் தவறியது மட்டுமல்ல, சுயமாக தணிக்கை செய்துகொள்ளவேண்டும் என அவர் களுக்கு பரிந்துரைப்பதைப் பார்க்கும்போது அதிர்ச்சி யளிக்கிறது. ...மதச்சார்பற்ற நாத்திக எழுத்தாளர் கள் மீது தொடுக்கப்படும் இம்மாதிரியான கொடூரத் தாக்குதல், பாதிக்கப்பட்டவர்களை மௌனமாக்கு வது மட்டுமின்றி மதப் பிரச்சினைகள் பற்றி சுயமாக கருத்துத் தெரிவிக்கும் அனைத்து பங்களாதேசி களுக்கும் பயத்தால் உறையவைக்கும் செய்தியை இது அனுப்புகிறது. ...இக் கொடூரத்தாக்குதல்களைத் தொடுத்தவர்களை நீதியின் முன் நிறுத்த பங்களா தேச அரசாங்கம் விரைவாக செயல்படவேண்டிய அவசியம் இருக்கின்றது. மத சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் தாக்குவதை பொறுத்துக் கொள்ள முடியாது என பொதுமக்களிடம் அறிக்கையையும் விடவேண்டும்" என கூறியுள்ளது. மேலும் அவ்வமைப்பு, "அரசியல் சாசனத்தை உயர்த்திப் பிடிப்பதும் மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் மத சுதந்திரத்தையும் பாதுகாப்பதும் தனது கடமை யாகும்" என அரசாங்கத்திற்கு அறைகூவி வலியுறுத்தி யிருக்கின்றது. சுதந்திரத்தை நேசிக்கும் மதச்சார் பற்ற சிந்தனைகொண்ட பகுத்தறிவு குழுக்கள் பலவும் பல்வேறு வெகுஜன அமைப்புகளும் இக்கொலை களைக் கண்டிக்க வீதியில் திரண்டன. குற்றவாளி களைப் பிடித்து தண்டிப்பதிலும் முன் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதிலும் அரசாங்கம் தவறி விட்டதை சுட்டிக்காட்டி போராடியிருக்கின்றன.

### அனைத்து மத அடிப்படைவாதிகளிடையே அணுகுமுறையில் வேறுபாடில்லை

ஆக, இந்துமத அடிப்படைவாதிகளுக்கும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கும் இடையே அணுகுமுறையில் எந்த வேறுபாடும் இல்லை. இருவேறு மதங்களைப் பின்பற்றுவதாக இவர்கள் சொன்னபோதிலும் இவர்கள் இரண்டு மதங்களின் அடிப்படை போதனைகளுக்கும் மதிப்பளிக்காமல் இருப்பதில் சமமாகவே இருக்கின்றனர். மாறாக இவர்கள், மதத்தை வெறியுணர்வுடனும் சகிப்புத் தன்மையற்ற தன்மையுடனும், மூர்க்கத் தன்மை யுடனும் சமப்படுத்துகின்றனர். மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கும் நபர்களின் குரல்வலையை நசுக்கும், அவர்களை கொடூரமாகக் கொல்லும் அதிகாரத் தையும் தங்களுக்குத் தாங்களே கொடுத்துக்கொள் கின்றனர். மாற்றுக் கருத்து கொண்டிருப்பவர்களை கொலைசெய்வதை அந்நாளில் இருந்த எந்த மத போதகர் கூறினார் என்பதை நாம் அறியோம்.

அடிப்படைவாதம் என்பது மதம் அல்ல என்பதை நாம் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம். குறுகிய அரசியல் பிரிவினரின் நலன்களுக்காக சுயநல நோக்கோடு மதம் பயன்படுத்தப்படும்போது அதனை அடிப்படைவாதம் என அழைக்கிறோம். உண்மையில், இந்த அடிப்படைவாத வெறியர்கள் மதத்தைக் கொச்சைப் படுத்துகின்றார்கள். மக்களை ஒடுக்கி ஆளும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு கைக் கூலிகளாக செயலாற்றுகின்றனர். மக்களின் பகுத்தறிவுச் சிந்தனையை மழுங்கடிப்பதும், அதனிடத்தே பிற் போக்கு பழமைவாதக் கருத்துக்களை வளர்ப்பதும், குருட்டு நம்பிக்கைகள்மீது பிடிமானத்தை உருவாக்கு வதும், அனைத்துக்கும் மேலாக, மதம் மற்றும் வேறு பல வேறுபாடுகளைப் பயன்படுத்தி உழைக்கும் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதும் இன்று ஆளும் வர்க்கத்திற்கு அவசியத் தேவையாக இருக்கின்றது. இதன் மூலம், இந்த காலாவதியாகிப்போன ஊழல் மலிந்த பிற்போக்கு முதலாளித்துவ அமைப்பு, புரட்சிகர எதிர்ப்பு அல்லது மக்களின் எழுச்சி என்ற எந்த ஒரு அச்சுறுத்தலையும் சந்திக்காமல் இருக்கலாம். இந்தியாவாகட்டும் அல்லது பங்களாதேசம் ஆகட்டும் இங்கு இருக்கும் பூர்ஷ்வா ஆட்சியாளர்களும் அவர்களுக்கு சேவை செய்யும் அரசாங்கங்களும், பகுத்தறிவு சிந்தனையாளர்களை மதவெறியர்களும் அடிப்படைவாதிகளும் எந்த எதிர்ப்பும் இன்றி கொலை செய்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன.

காட்டுமிராண்டித்தனமான இக்கொலைகளைக் கண்டித்து இரண்டு நாடுகளிலும் சரியாகச் சிந்திக்கக்கூடிய முற்போக்கு எண்ணம் கொண்ட மனிதர்கள் எதிர்ப்புக் குரலெழுப்புவதைப் பார்க்கும் போது ஆறுதல் அளிக்கின்றது. பாஜக அமைச்சர் களின் மிரட்டலையும் அசிங்கப்படுத்துவதையும் மீறி பல சான்றோர்கள் இந்தியாவில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அகாதெமி விருதுகளையும் பத்ம விருதுகளையும் திருப்பிக் கொடுத்துவிட்டனர். சாகித்திய அகாதெமியிலிருந்து பலர் பதவி விலகியிருக்கின்றனர். அவர்களுக்கு எமது உண்மையான பாராட்டுதலும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

மதவெறித் தாக்குதல்களுக்கு எதிராக எழும் பொதுக் கருத்தை மேலும் உறுதிப்படுத்தி, அக்கருத்தின் வெளிப்பாட்டை ஒரு சக்திவாய்ந்த அமைப்புரீதியான தளர்வற்ற தேசிய இயக்கம் என்ற வடிவத்தில் வளர்த்தெடுப்பது இத் தருணத்தின் தேவையாகும். அப்படிச் செய்வதன் மூலமே, வெறிச் செயல்களைத் தடுக்கவும் குற்றவாளி களுக்கு தண்டனை வழங்கவும் அந்தந்த அரசாங் கங்களை நிர்ப்பந்திக்க முடியும். மக்கள் விரோத மதவெறி – அடிப்படைவாத அமைப்புகள்மீது, கண்மண் தெரியாமல் அரக்கத்தனமாகக் கொல்லும் தங்களின் குற்ற நிகழ்ச்சி நிரலை கைவிட வைக்க அதிக அழுத்தம் கொடுக்கமுடியும். அதேசமயம், அடிப்படைவாத–கண்மூடித்தன–பழமையைப் புதுப்பிக்கும்– மதவெறி சிந்தனைகளை எதிர்த்து மக்கள் மனதில் பகுத்தறிவு– தர்க்கரீதியான– அறிவியல்பூர்வ–மதச்சார்பற்றசிந்தனைகளை வளர்க்க ஒரு தீவிரமான தொய்வற்ற தத்துவார்த்த போராட்டத்தையும் நடத்தவேண்டும்

# பேரவைத் தேர்தல் கோரி போராடிய கல்லூரி மாணவர்கள் மீதான போலீஸ் தாக்குதலை கண்டித்து ஏஐடிஎஸ்ஓ அறிக்கை

*மாணவர் பேரவைத் தேர்தலை நடத்த வலியுறுத்தி நியாயமாகப் போராடிய மாநிலக் கல்லூரி மாணவர்கள் மீதான காவல் துறையின் கண்மூடித்தனமானத் தாக்குதலைக் கண்டித்து ஏஐடிஎஸ்ஓ மாநிலச் செயலாளர் தோழர் எம்ஜெ வால்டேர் வெளியிட்டுள்ள அறிக்கை.*

*12–10–2015 அன்று சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையினர் கண்மூடித்தனமானத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதன்மூலம் போராடும் மாணவர்கள் மீது காவல்துறை மிகக் கடுமையாகத் தாக்குவது தொடர்ந்து அதிகரித்துவருகிறது. மாநிலக் கல்லூரி மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலி யுறுத்தி தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.*

மாணவர் பேரவைத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற ஜனநாயகபூர்வமான கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் மேற்கொண்ட போராட்டத் திற்கு கல்லூரி நிர்வாகம் சற்றும் செவி சாய்க்காமல் இருந்துவருவதால் வேறு வழியின்றி அவர்கள் மறியலில் ஈடுபட முயன்றனர். ஆனால் வருங்காலத் தூண்கள் என்று அழைக்கப்படும் அம்மாணவர்களை கிரிமினல் குற்றவாளிகளை விட மோசமாக காவல்துறை நடத்தி, கண்மூடித் தனமாகத் தாக்கிக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கும் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (ஏஐடிஎஸ்ஓ) அதே வேளையில் கைது செய்யப் பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் காயமடைந்த மாணவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சையும், இழப்பீடும் அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும், அவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை காவல்துறை திரும்பப்பெற வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

மாணவர்கள் மீதும், கல்வி அமைப்புகளின் மீதும் தொடுக்கப்படும் இத்தகைய ஜனநாயக விரோதத் தாக்குதல்களுக்கு எதிராகவும், தமிழ்நாடு முழுவதும் மாணவர் பேரவைத் தேர்தல்களை ஜனநாயக ரீதியில் நடத்த வலியுறுத்தியும் மாணவர்களும், கல்வியின் மீது அக்கறை கொண்ட மனிதர்களும் ஒன்றிணைந்து கூட்டாகப் போராட முன்வரவேண்டும் என்றும் ஏஐடிஎஸ்ஓ கேட்டுக்கொள்கிறது.




மதுரையில் அக்டோபர் 17, 2015 அன்று இடதுசாரி கட்சிகளின் மாணவர் சங்கங்களான AISF, SFI, AISA, RSF, AIDSO இணைந்து சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்கள் மீது போலீஸ் தாக்குதலைக் கண்டித்து நடத்திய ஆர்ப்பாட்டம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 27th November 2015

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

## காட்டுமிராண்டித்தனமான தாத்ரி கொலை

# மதவெறிக்கு எதிரான வலிமைமிக்க ஒன்றுபட்ட இயக்கத்தின் அவசியம்

5ம் பக்கத் தொடர்ச்சி

இருப்பதாக மத்திய அரசாங்கமே அறிவித்துள்ளது. இதைக் கண்டு நாம் பெருமைப்படமுடியுமா? சகோதரர்களே சகோதரிகளே, இது உங்களை கவலையில் ஆழ்த்தியுள்ளதா என்று எனக்குத் தெரியாது, ஆனால் எனது இதயம் இதனால் வேதனையுறுகிறது. நீங்கள் ஏன் மௌனமாக இருக்கின்றீர்கள், ஏன் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.'

மாட்டிறைச்சியின் நிறம் பிங்க் என்பதைத்தான் அவர் 'பிங்க் புரட்சி' என்று குறிப்பிட்டுள்ளார். பாஜகவின் இந்த வார்த்தையை அன்றைய காங்கிரஸ் அரசாங்கத்தை குறிவைத்து, பசுவதையைத் தடைசெய்ய வேண்டும் என்ற அவர்களது கோஷத்தை எழுப்புவதற்காகவே பயன்படுத்தினார். தாத்ரி கொலைக்குப் பின்னர் மதவெறிமோதல்களைத் தூண்ட ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் செய்வதைப்போல் வெளிப்படையாகக் கூறவில்லை என்றாலும், மோடியும் சமீபத்தில் பீகாரில் தேர்தல் பிரச்சாரத்தில் ஆர்ஜேடியின் தலைவர் லாலு பிரசாத் யாதவையும் அவரது யாதவ சாதியையும் குறிப்பிட்டு பேசியதாவது, 'நான் துவாரகா நகரிலிருந்து வருகிறேன், துவாரகா என்பது யாதுவன் (பீகாரின் யாதவா சாதியைக் குறிக்கிறது) உடன் நேரடி தொடர்புடையது... எனவே ஸ்ரீகிருஷ்ணரை வணங்கக் கூடிய, பசுவை தங்கள் தொழுவத்தில் வளர்க்கக்கூடிய, பசுவுக்கு உணவு அளிக்கக் கூடிய அதே யாதவர்கள், அவர்களுடைய தலைவர்கள் விலங்குகளை பெருமையாகக் கொல்பவர்களுடன் சேர்ந்து ஓரணியில் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைகிறேன்.'

இதில் விஷயம் என்னவென்றால், இவரது ஆட்சியிலும் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. உத்திரப்பிரதேசத்தில் 317 மாடு அறுக்கும் தளங்களும் எருமை மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்யும் 24 யூனிட்டுகள் உள்ளன, இந்தியாவின் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் 67% அங்கிருந்துதான் வருகிறது. மிகப்பெரிய மாட்டிறைச்சி ஏற்றுமதியாளர்களில், மாட்டுக்கறி மாட்டு உறுப்புகள் தொடர்பான தொழிற்சாலை நடத்துபவர்களில் 6 இல் 4 பேர் இந்து தொழிலதிபர்கள் ஆவர். ummid.com நடத்திய ஆய்வு தெரிவிப்பதாவது, '4.5 பில்லியன் டாலர் மதிப்புள்ள விலங்குகளை அறுக்கும் தொழிலில் அதிகம் ஆதாயம் பெறுபவர்கள் அரசாங்கமும் முஸ்லீம்–அல்லாதவர்களுமே ஆவர். இறைச்சி ஏற்றுமதி செய்பவர்களில் 6 இல் 4 பேர் இந்துக்கள். மாட்டிறைச்சி ஏற்றுமதி, எலும்பை நொறுக்கி தூளாக்கும் தொழிற்சாலை, தோல், மற்றும் ஒலியெழுப்பும் உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள், மாட்டு ரத்தம் பிரித்தெடுக்கும் தொழில், விலங்கின் கொழுப்பை எடுக்கும் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலைகளை நடத்துபவர்கள் பெரும்பாலும் முஸ்லீம் அல்லாதவர்களே. அதுமட்டுமல்ல, முஷாபர் கலவரத்தில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளவரும், மாட்டிறைச்சிக்கு எதிரான போராட்டங்களுக்கு முன்னணியில் இருப்பவருமான ஆவேச பாஜக எம்எல்ஏ, சங்கீத் சோம் அவர்கள்தான் இந்தியாவின் மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்வதில் முன்னணியில் உள்ள நிறுவனமான அல்–துவா நிறுவனத்தை உருவாக்கியுள்ளார். மாட்டிறைச்சி தொடர்பாக ஆர்எஸ்எஸ்–பாஜகவின் உண்மையான நோக்கமும் அவர்களது தலைவர்களின் சதிச் செயல்களையும் எடுத்துக் காட்டுவதற்கு இந்த அளவு உதாரணங்களே போதும் என நம்புகிறோம்.

இங்கே மற்றொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். இந்து மதத்தில் மாட்டிறைச்சி உண்பது குற்றம் என்று கருதப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். உயர்ஜாதி இந்துக்களும் மாபெரும் சாதுக்களும் நீண்ட காலத்திற்கு முன்பே மாட்டிறைச்சியை உண்டுள்ளனர் என்பதை பண்டைய இந்து நூல்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்றன. பசுவின் மீதான அன்பு என்பது அதன் வீட்டு உபயோகம், அதோடு உணவிற்காகவும் பயன்பாட்டை குறித்துதான் வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று வரலாற்றியலாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு அரசன் 20100 மாடுகளைக் கொன்று தனது விருந்தினர்களுக்கு விருந்தளித்ததாக மகாபாரதக் கதையில் கூடவருகிறது. கிபி 8ஆம் நூற்றாண்டில் பாபாபுதி அவர்களால் எழுதப்பட்ட புகழ்பெற்ற நாடகமான உத்தரா–ராம–சரிதையில் அயோத்தியை சேர்ந்த சௌதாகாக்கி மற்றும் தன்டயனா என்ற இரண்டு இளம் துறவிகளிடையே நடைபெறும் உரையாடலில் தயிர் மற்றும் தேனுடன் சேர்த்து மாட்டிறைச்சி பரிமாறுவது வழக்கம் என்றும் அதற்காக கிடாரி, பெரிய மாடு அல்லது ஆடு போன்றவற்றை விருந்தாளியாக வரும் பிராமணருக்கு வழங்குவது வழக்கம் என்றும் வருகிறது. இது புனித விதியில் எழுதப்பட்டுள்ளது. எஸ் கணேஷ் மற்றும் ஹரி ரவிக்குமார் அவர்கள் IndiaFacts.com எனும் வலைதளத்தில் 'உணவு மற்றும் பருகுதல் பற்றிய இந்துவின் பார்வை' என்ற கட்டுரையில் பசுவை வேத நூல்கள் மிகவும் மதித்தாலும் அவை எருமைகளையும் மற்றும் மாடுகளையும், தரிசு மாடுகளையும் உணவாக உட்கொள்வதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை என்று கூறுவதை சுட்டிக்காட்டியுள்ளனர். விவேகானந்தரும் இதேபோன்றதொரு பார்வையை வெளிப்படுத்தியுள்ளதை நாம் காணலாம், அவர் கூறியிருப்பதாவது 'மாட்டிறைச்சியை உண்ணாதவர்கள் நல்ல இந்து என்று கருதப்படமாட்டார்கள் என்று இந்து பழக்கங்கள் மற்றும் சடங்குகளில் கூறப்படுவதைக் கேட்டு நீங்கள் எல்லோரும் ஆச்சர்யப்படுவீர்கள்' (முழு தேர்வு நூல்கள், தொகுதி 3).

எவருடைய சொந்த மத நம்பிக்கையையும் புண்படுத்துவதற்காக இந்த ஆதாரங்களை எல்லாம் நாம் கூறவில்லை ஆனால், ஆர்எஸ்எஸ்–பாஜக போன்ற மதவாத சக்திகள் இந்து மதத்தின் கருத்துக்களில் உள்ள உண்மைகளைத் திரித்துக்கூறுகின்றனர் என்பதை நிரூபிக்கவே எடுத்துக்கூறியுள்ளோம். ஒருவர் எந்த உணவை உண்ணவேண்டும் என்பது ஒருவரின் தனிப்பட்ட விவகாரம் என்பதே எங்களது கருத்து. எந்த ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக அரசும் அதன் குடிமக்களின் உணவு உரிமை விவகாரத்தில் தலையிடாது. திட்டமிட்ட அரசியல் நலனை உறுதிப்படுத்துவதற்காகத்தான் மாட்டுக்கறி விவகாரம் தொடர்பாக இவ்வளவு பூதாகரப் பிரச்சினை கிளப்பப்படுகிறது. ஆர்எஸ்எஸ்–பாஜக, சங் பரிவார் போன்றவை பசுவை தங்களது தாயாகக் கருதினால், எதற்காக பசுவின் தோலில் செய்யப்பட்ட ஷூக்களை, செருப்புக்களை, பெல்ட்டுகளை அணிகின்றனர்? உண்மையில் அவர்கள் மற்ற அடிப்படைவாத மதவெறிக் சக்திகளைப் போலவே மதத்திற்கு நம்பிக்கைக்குரியவர்கள் அல்லர். மதம் என்பது அடிப்படைவாதமல்ல. நயவஞ்சக அரசியல் நலனுக்கு சேவைபுரிவதற்காக மதம் பயன்படுத்தப்பட்டால் அதுதான் அடிப்படைவாதம்.

இந்த மதரீதியான பிளவைப் பயன்படுத்தி தேர்தலில் ஆதாயம் பெறுவதும் அதிகாரத்திலேயே தொடர்ந்து இருப்பதும் மட்டுமே ஆர்எஸ்எஸ்–பாஜக மற்றும் அதன் சங் பரிவார் அமைப்புகளின் ஒரே நோக்கமாகும். வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்த்தால், வரலாற்று சிறப்பு மிக்க பாபர் மசூதியை இந்துத்துவா வெறியர்கள் பாஜகவின் முன்னணித் தலைவர்களின் முன்னிலையிலேயே இடித்தபின்னர், அதைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறுபகுதிகளில் ஏற்பட்ட திட்டமிட்டு தூண்டப்பட்ட இனக்கலவரங்களுக்குப் பின்னர் பாஜக தனது எம்பிக்களின் எண்ணிக்கையை 2 லிருந்து 83 ஆக உயர்த்தியது. அதேபோன்ற மதவெறி சூழலை உருவாக்கித்தான் அது மத்தியிலும் ஆட்சியைப் பிடித்தது.

பசுவதை என்ற மாயையை ஏற்படுத்தி மத வெறியைத் தூண்டுவது குஜராத் முதல்வராக இருந்தபோதிலிருந்தே நரேந்திர மோடியின் அரசியலின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. திட்டமிட்டு நடத்தப்பட்ட குஜராத் கலவரத்தின் மூலம் இந்து மதவெறி உணர்வைத் தூண்டினார் நரேந்திர மோடி. அதேவேளையில் இதற்கு மாறாக முஸ்லீம் அடைப்படைவாதிகள் சிறுபான்மையினர் மதவாதம் கோரமான தலைதூக்குவதற்கும் முஸ்லீம் மக்களிடையே தூண்டுவதற்கும் இட்டுச் சென்றது. இவ்வாறாக ஒடுக்கப்படும் மக்களின் ஒற்றுமையையும் சகோதர ஒற்றுமையையும் சீர்குலைப்பதில் நரேந்திரமோடி கைதேர்ந்தவராக இருக்கிறார் என்று கவனித்த ஆளும் முதலாளித்துவவாதிகள் அவரை தங்களது நம்பிக்கைகுரிய அரசியல் பிரதிநிதியாக பார்த்தனர். இந்த மத ரீதியான ஒருங்கிணைப்பு காங்கிரசுக்கு மாற்றாக ஒரு சக்திவாய்ந்த பூர்ஷ்வா அரசியல் மாற்றாக பாஜக என்ற நிலையை உறுதிப்படுத்தியது.

குஜராத் பரிசோதனையில் தங்களுக்குகிடைத்த வெற்றியால் தைரியமுற்ற ஆர்எஸ்எஸ்– பாஜக தலைவர்கள் அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட மத மோதல்களைத் தூண்டுவது என்ற தங்களது திட்டத்தை தொடர்ந்தனர், அதன்மூலம் மத கொந்தளிப்புகளை ஏற்படுத்திவந்தனர். கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பாக, முஷாபர் நகர உள்ளிட்ட உத்திரப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் அதேபோன்று மற்ற மாநிலங்களின் வேறு சில பகுதிகளிலும் சிறிய மற்றும் பெரிய அளவிலான மதக் கலவரங்கள் வெடித்து ரத்த ஆறு ஓடின, அதை ஆர்எஸ்எஸ்–பாஜக தலைவர்கள் தூண்டிவிட்டு நடத்தியதற்கான ஆதாரங்களும் கிடைத்தன. தற்போது பீகார் தேர்தல் நடந்துவருகையில் உத்திரபிரதேச சட்டசபைத் தேர்தல் வர இருக்கையில், மிகப்பெரிய மதப் பிளவை ஏற்படுத்தி மதக் கலவரத்தைத் தூண்டுவதற்கு மாட்டிறைச்சி சர்ச்சை ஒரு உகந்த கருவியாக இருக்கும் என்று ஆர்எஸ்எஸ்–பாஜக தலைமை கருதுகிறது.

இந்து மதவெறி ஆர்எஸ்எஸ்–பாஜகவின் இந்த தீய விளையாட்டையும் அதேபோல் அதற்குப் பதிலடியாக முஸ்லீம் அடிப்படைவாதிகளின் சிறுபான்மை மதவாத நடவடிக்கை ஆபத்துகளையும் உழைக்கும் மக்களின் அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்வதோடு, தேர்தல் ஆதாயத்திற்காக மக்களிடையே இதுபோன்று மத ரீதியில் பல்வேறு விதமான பிரிவுகளைத் தூண்டும் இந்த நயவஞ்சக நாசகார சதித் திட்டத்திற்கு பலியாகமல் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதையும் உணரவேண்டும். அடிப்படைவாத–மதவாதத்தின் கருத்துக்களை எதிர்த்து முறியடிப்பதற்கு மதம், சாதி, மற்றும் வேறு சில வேறுபாடுகளை மீறி உக்கிரமான சித்தாந்த போராட்டத்தோடுகூடிய மதச்சார்பற்ற–ஜனநாயக இயக்கத்தை நடத்தினால்மட்டுமே மதவெறி சக்திகளின் இதுபோன்ற நச்சு தாக்குதல்களை முறியடிக்க முடியும், முகமது அக்லாஹ் போன்ற அப்பாவிகளின் உயிர்களையும் பாதுகாக்கவும் முடியும்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org